உ
சிவமயம்

திருவுத்தரகோசமங்கை

ஸ்ரீமங்களநாயகி சமேத

ஸ்ரீமங்களநாத சுவாமி

(சைத் ரோத்ஸவ)

திருக்கல்யாண வரலாறு

-மங்களநாதன்-

வளர்கின்ற நின் கருணைக் கையில்
வாங்கவு நீங்கி யிப்பான்
மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய்
வென் மதிக் கொழுக் தொன் றொளிர்கின்ற
நீண்முடி யுத்தர கோச மங்கைக் கரசே!
தெளிகின்ற பொன்னு மின்னும் மன்ன
தோற்றச் செழுஞ் சுடரே.

(திருவாசகம்)

-மங்களநாயகி-

செஞ்சொல் வளர் புகலூரி லந்தணர் குலத்திலச்
கிராக்கியம் பெருமுகுந்தன்
செல்வியாய்ப் பொன்னேறு பூண்முலை யெனும்பேர்
திருந்திய பசுங் கிள்ளையாய்க்
கஞ்சமுக வணிகனருள் பொன்னுற்ற பூண்முலைக்
கன்னியாய் மேழி கட்டும்
கங்கா குலத்தில் வரு பூணரும் வனமுலைக்
காரிகையுமாகி மிக்க
பஞ்சின் மெல்லடி கொண்ட திரை சேர் மடந்தையம்
பாவையாய் முந்தவுலகம்

பதினாலையும் பெற்ற மங்களேசுரி பரா
சக்தியா யிந்த வகையாய்
அஞ்சுவடி வாகியென் கோனொடு மிருந்தமயி
லம்மானை யாடியருளே
அதிரு நான், மறை சொல்லும் வதரிகாவனவல்லி
யம்மானை யாடியருளே.

(மங்களேசுவரி பிள்ளைத் தமிழ்)

திருவுத்தர கோச மங்கைத் தலம்

(மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம்)

(1)

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாசகத்தன் வாழ்பதியென் – கோதாட்டிப்
பத்தரரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோச மங்கையூர். (திருத்தசாங்கம்)

(2)

நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவும்,
கோல அழகிற் றிகழுங் கொடி மங்கை யுள்ளுறை கோயிற்
சீலம் பெரிது மினிய திருவுத்தர கோச மங்கை,
ஞாலம் விளங்க விருந்த நாயகனை வரக் கூவாய்.

(3)

கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயிலே யிது – கேள் நீ
அந்தண னாகிவந்திங்கே அழகிய சேவடி காட்டி,
எந்தம ராமிவ னென்றில் கென்னையு மாட்கொண்டருளும்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான் வரக் கூவார்

(குயிற் பத்து)

(4)

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான் – **மாவேறி**
வையகத்தே வந்திழிந்த வார்கழலகள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். (திருவெண்பா)

(5)

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோச மங்கை
தங்குளவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம் பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

(6)

முன்னா விடத்தினிற் பாற்கட லுறங்கிய
முகுந்தனுந் திசை முகத்தின்
முதல் வனுந் தேடியுங் காணாத வடவாய்
முனைத்தவன் விளங்கி மகிமை
தன்னால் வளர்ந்த சோணாசலந் தில்லை குற்றலந்து வரதசாந்த
தலமான மதுரை காளத்திரா மேசுரந்
தானென்ன வேதமெல்லாம்
பன்னால யத்தினும் பலவால யத்தினும்
பஞ்சபூ தத்தினுக்கும்
பண்டுற் தெழும்பியொரு காலத்து மழியாத
பாதல மென்று **மங்கைப்**
பொன்னாலயத்திலெங் கோனொடு மிருந்த மயின்
பொன்னூசல் வாடியருளே
பொன்னேறு முலைமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே. (திருப்பொன்னூசல்)

காப்பு

1

சீர் பெருகு மங்களப் பேர் தேவி மங்களே ச்வரனை
பேர் பெருகச் செய் மணத்தைப் பேசவே யேர் பெருகு
தந்தி முகத் தானுபயத் தாதவிழுந் தாமரைத்தான்
அந்தி பகலா தாவேயாம்.

2

திரைகடலுடுத்த பார்மேற்றிகழரு பாண்டிய நாட்டில்
பரை திருவருளாற் சேதுபதியெனுமகிபன் போற்ற
உரைபெரும் புகழ் பெற்றோங்கும் உத்தரகோச மங்கைக்
காசியின் சரிதைசொல்லஆறுமாமுகன்றான்போற்றி.

3

குயிலினுக் கெதிரே காக்கை கூவிநின்றிடு தலென்ன
மயிலியற் சாயல் தேவி மங்களேச்வரியின் மீதே
அயிலுடைக் குமரன் தாய் தன்னருளினா லறைந்த வின் நூல்
கியலுடைக் கவிஞர் குற்ற மியம் பிடாரி சைவு கொண்டு.

4

உலகெலாம் புகழ் வோங்கு முத்தர கோச மங்கைத்
தலத்திலோர் பனவன் பெண்ணைத் தற்பான் வேட்டானென்னும்
கலமிகும் சரிதை தன்னை நைம்ய சாரணியர் கேட்க
மல வலி தொலைத்த சூதமா முனி வருத்தான் மன்னோ.

-
- ஸோமநாதபாரதி.

உ
சிவமயம்

முன்னுரை.

திருவுத்தரகோச மங்கைத் தலமகிமை.

(1) ‘தென் கைலாயம்’, ‘ஆதி சிதம்பரம்’, என வழங்கப் பெறும் ‘திருவுத்தர கோச மங்கை’ என்னும் புண்ணியத்தலம், மிகவும் பழமையானது. ‘மண் முந்தியோ மங்கை முந்தியோ’, என்ற பழமொழியும் வழங்கி வருகிறது. இதனால் காலக் கணக்கைக் கடந்தது. சைவசமயாச்சாரியர்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகியநாயன்மார்களில், மாணிக்கவாசபெருமானை சீடராகக் கொண்டு, அன்னவருக்கு உபதேசம் செய்து அருள் பாலித்த திவ்யதலம் இது எனப் போற்றப்படுகிறது. இத்தலத்தின் சிறப்பை மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில், குயில் பத்து, திருவெண்பா முதலாய பாடல்களில் காணலாம்.

(2) திருவுத்தர கோசமங்கை என்ற வாக்கியத்தை உத்தரம் – கோசம் – மங்கை என மூன்று பதங்களாகப் பிரிக்கலாம். மங்கையாம் மங்களேச்வரி தேவிக்கு வேதாகமங்தளின் கோசத்தை, அதாவது உண்மைப் பொருளை, உத்தரம் என்ற பதத்தின் பொருளான உபதேசம் எனப் பொருள் கொண்டு, தேவிக்கு இரகசியத்தை உபதேசித்தைக் குறிப்பிடும் தலம் எனப் பெரியோர் கூறுவர்.

(3) பரமேச்வரரிடம் தனக்கு வேதாகமங்களின் உண்மையை உபதேசம் செய்தருள வேண்டுமெனத் தேவி பிரார்த்திக்க, இறைவன் இசைந்தார். நந்தி தேவரை அழைத்து “நாம் தேவிக்கு உபதேசம் செய்யுங் காலத்தில் ஒருவரும் நம் முன்வர அனுமதிக்கல் கூடாது”, என ஆணையிட்டார். அதன்படியே நந்திதேவர் காவல் புரிந்தார். பின், தேவியை நோக்கி, “நாம் உபதேசிப்பதைக் கவனமாய் கேட்பாயாக’ கவனக் குறைவால் மறுபடியும் கேட்பாயாகின், அந்தவேண்டுகோளை அங்கீகரிக்க மாட்டோம்” என எச்சரித்தார். உபதேசம் நடந்தது. அது சமயம், வெளியே கணபதியும், முருகனும், நந்திதேவருடன் செய்த வாதத்தின் சத்தல் கேட்டு, தேவி சிறிது கவனம் இழ்ந்தாள். இறைவன் உபதேசித்தது இன்னதென்று அறிந்துகொள்ள முடியாமல், மறுபடியும் உரைத்தல் வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்க, இறைவன் சினந்து, “என் உபதேசத்தை அலட்சியம் செய்ததால், நீ பூவுலகில் மானிடப் பெண்ணாகப் பிறக்ககடவாய்” என்று சாபங்கொடுத்தார். அறியாது செய்த பிழையை மன்னித்தருளவேணுமென தேவி பிரார்த்திக்க, ‘சொன்னது நடந்தே தீரும், ஆனால் உடனே நிறைவேறாமல், பின்னாலாகக்கடவது” என்று திருவாய் மலர்ந்தருளினார்.

(4) முன் சொன்ன உபதேசம் நடக்குந் தருணம் கணபதியும், முருகனும், எம்பெருமானையும் எம்பிராட்டியையும் பார்க்க ஆவல் கொண்டு வர, நந்தி தேவர் இறைவன் தனக்கிட்ட ஆக்ஞையைத் தெரிவித்தார். "இறைவன் குழந்தைகளான எங்களுக்குத் தரை ஏதும் இல்லை, எங்களை மனத்திற் கொண்டு இத்தடை விதித்திருக்க மாட்டார் எம் தந்தை", என்ற வாதம் செய்தனர். நந்திதேவர் திகைத்து நிற்க, இரு குழந்தைகளும் உள்ளே ஓடிச் சென்று, தாயிடம் ஒருவரும் தந்தையிடம் ஒருவருமாய் நின்று கொண்டரன். இது கண்ட இறைவன் நந்தி தேவரை நோக்கி, "உன் பணியில் நீ தவறியதால், திமிங்களமாகப் பிறக்கக் கடவாய்" என்று சபித்தார். நந்திதேவர் 'பிழைபொருத்தருள வேண்டும்" என இறைஞ்ச, "பின் உன்னைத் தடுத்தாட்கொள்வோ" மெனப் பணித்தருளினார். நந்திதேவர் கடலில் திமிங்கலமாக அவதரித்தார். கடல்களில் அந்தத் திமிங்கிலம் செய்த திருவிளையாடல்களைக் கண்ட இறைவன், அதனை அடக்கி சாபவிமோசனங் கொடுத்தருளினார். இந்த விவரங்களை மாரியூர் தலபுராணத்தில் காணலாம்.

(5) இறைவன் கணபதியை நோக்கி "நீ நந்தியின் காவலை மீறினமையால், இன்று முதல் எம் வலது பக்கமல்லாது இடது பக்கம் அமருவாய்" என அருளினார். இன்றும் கணேசப் பெருமான் இத்தலத்தில் கோபுரவாயிலில் இடது புறம் எழுந்தருளி யிருப்பதைக் காண்கிறோம்.

(6) இளவல் முருகனை நோக்கி, "நீ மிகவும் வாதிட்டாய். ஆகவே, மதுரையில் செட்டி வீட்டில் ஊமைப் பிள்ளையாய் பிறக்கக் கடவாய்" என, முருகவேள் "அப்பன் அடித்தால் அணைப்பவர் யார் அண்ணலே! பிழை பொருத்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தார். இறைவன் மனமிளகி, "நக்கீரனுடைய தமிழ் நூலின் பெருமையை அறியாமல் சங்கப் புலவோர் இடர்படும் போது, நீ வாய் திறந்து தமிழின் சுவை கண்டு, அவர்கள் சந்தேகத்தை நீக்குவாய்" என்று அருள் பாலித்தார். சங்க நூல்களிலும் முருகன் 'செட்டி மகனாய்', தங்கக் கட்டி மணியாய்' அவதரித்து தமிழ்ச்சங்கத்தில் வாய் திறந்து மொழிந்தது விளங்கும்.

(7) இத்தலத்தில் திருக்கோவில் உட்பிராகாரத்தில் ஸகஸ்ரலிங்க ஆலயம் ஒன்று விளங்குகிறது. இதன் சிறப்பு பின் வருமாறு:-

திருவாசகம் அருளிச் செய்த சரித்திர பூர்வமான மாணிக்கவாசகப் பெருமான் முற்பிறப்பில் இத்தலத்தில் சிவ பெருமான் தோற்றுவித்த ஆயிரம் சீடர்களோடு, இலந்தை மரத்தின் கீழ் அமர்ந்திருந்த சிவ பெருமானால் உபதேசம் பெற்று வந்தார். அவரே சீடர்களுக் கெல்லாம் தலையாய் விளங்கினார்.

(8) முன், இலங்கை அதிபன் இராவணன், பார்வதி என நினைத்து மண்டோதரியை எடுத்துச் செல்லத் திருக்கயிலை வந்தான். மண்டோதரி, நடுங்கி

“இறைவா, தங்கள் திருமுன்பினின்றும் நீங்கி அரக்கனிடம் வாழ்வதெங்ஙனம்” என வருந்தினாள். இறைவன் “பெண்ணே! வருந்தாதே நீ இராவணனுடைய பட்ட மகிஷியாய் விளங்குவாய், உன்னைச்சிறப்புடன் கொள்வான்”. நீ வேண்டும் போது நாம் உன்முன் தோன்றுவோம்” என வரம் அளித்தார்.

(9) ஒரு நாள் இறைவன் தம் சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் போது, மண்டோதரி இறைவனைக் காண வேண்டி நினைந்தாள். இறைவன் அவளுக்குக் காட்சி கொடுக்கத் திருவுளம் பற்றி “மாணிக்கவாசகர் நாம் இலங்கை செல்கின்றோம், நீயும் மற்றவர்களும் ஏடுகளைக் கீழே வைக்காது பாராயணஞ் செய்க: எனப் பணித்தார். சீடர்கள் எல்லோரும் “அண்ணலே, இராவணனால் தங்கள் திருமேனிக்கு இடையூறு ஏற்படுமோவென அஞ்சுகிறோம்” என, இறைவன் “அஞ்சாதீர், அப்படி ஏதேனும் ஏற்படுமாலின் எதிரேயிருக்கும் தீர்த்தத்தில், அக்கின் தோன்றும், அறிவீர்” என அருளி மறைந்தார்.

(10) இலங்கையை அடைந்த இறைவன் மண்டோதரியால் பூஜிக்கப் பெற்று, அவளுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். இதை எவரும் அறியார். இராவணன் திடீரென மண்டோதரியின் அந்தப் புரம் வந்து விட்டான். இறைவன் குழந்தை வடிவாக மாறினார். “இராவணன் அக்குழந்தையைக் கண்டு மெய்மறந்து தன் கரத்திலேந்திக் கொஞ்சினான். அப்பொழுது அவன் விரல் நகங்களினால் குழந்தையின் விலாப்புறங்களில் சிறிது இரத்தம் கசிந்தது. மண்டோதரி செய்வதறியாது மயங்கி நின்றாள்.

(11) அப்பொழுது திருவுத்தரகோச மங்கையின் முன் சொன்ன தீர்த்தத்தில் அக்கினி தோன்றியது. சீடர்கள் கலங்கினர். உலக வாழ்வை வெறுத்தனர். ஏடுகளை மாணிக்கவாசகரிடம் ஒப்புவித்து ஒருவர் பின் ஒருவராய் அவ்வக்கினியில் மறைந்தனர். எஞ்சியவர் மாணிக்கவாசகர் ஒருவரே. ஆதியும் அந்தமும் இல்லாதவரும், அக்கினியாலும் அழிக்கப்படாதவரும் ஆனவர் இறைவன், என்ற பேருண்மையை அறிந்தவராகையால், மாணிக்கவாசகர் ஏடுகளைத் தாங்கியவண்ணம் தியானத்தில் அமர்ந்திருந்தார்.

(12) இலங்கையில் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்த இராவணன் “இது யார் குழந்தை” என்று வினவ, உமாதேவி மாறுவடிவுடன் தோன்றி, “அது என் குழந்தை கொடுப்பீர்” எனறு வேண்டிப் பெற்றுக்கொண்டு மறைந்தனன். மண்டோதரியும் இராவணனும் இவ்வதிசயத்தை நினைந்து நினைந்து போற்றினர்.

(13) இறைவன் இவ்வனம் திரும்பவே, மாணிக்கவாசகர் தாம் சுமந்திருந்த ஏடுகளை இறைவனிடம் கொடுத்து தானும் அக்கினிப் பிரவேசமாக அனுமதி கோரினார். எம்பிரான், “பிள்ளாய்! உம்பொருட்டு ஆயிரம் சீடர்களைத்

தோற்றுவித்தோம். அவர்கள் அக்னி ஸ்வரூபனான நம்மிடம் கலந்தினர், இதோ பார் என்று ஆயிரம் லிங்கங்களாகக் காக்ஷி கொடுத்து "மாணிக்க வாசகா! நீ இனிக் கற்க வேண்டியது யாதும் இல்லை. மறுபிறவியில் நீ எம்மை திருப்பெருந்துறையில் காண்பாய்" எனத் திருவாக்கருளி மறைந்தார். மேலே விவரிக்கப்பெற்ற ஸகஸ்ரலிங்கமும் உபதேசம் செய்த இடமாகிய இலந்தை மரமும், அக்னி தீர்த்தமும் இத்தலத்தில் இன்றும் விளங்குகின்றன. மணி வாசகப் பெருமான், அடுத்த பிறவியில் திருப்பெருந் துரையில் இறைவனைத் துதிக்கையில் "ஓங்கும் உத்தரகோசமங்கைக்கரசே திருப்பெருந்துறை மன்னா" என்று பாடியிருப்பது இவ்வரலாற்றுக்குச் சான்று எனக் கூறலாம்.

(14) மேலும், வியாக்ரபாதர், பதஞ்சலி முதலிய முனிபுங்கவர்களுக்கு இரகசியத் தாண்டவம் காண்பித்து ஆதி சிதம்பரம் எனப் போற்றப் பெறும் ஸ்ரீ நடராஜர் ஸந்நிதியும் இத்தலத்தில் புகழுடன் விளங்குகிறது. இங்கு எழுந்தருளி யிருக்கும் நடராஜப் பெருமானுக்கு ஒவ்வோர் ஆண்டிலும் மார்கழி மாதத்தில், திருவாதிரையன்று, விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடந்துவருகின்றன. மூர்த்தியின் திருமேனிக்கு அன்று தான் அபிஷேகம் செய்வார்கள். அது இரகசியமாகவே செய்யப் பெறும். அபிஷேகம் செய்த திருமேனி முழுவதும் சந்தனத்தால் அலங்கரித்த பின்பு தான் எல்லோரும் தரிசனம் செய்யலாம். இது இத்தலத்தில் நடைபெறும் ஆருத்ரா தரிசன உற்சவம் பத்து தினங்களில் ஒரு சிறந்த தினமாகும்.

(15) இவ்வாறு ஸ்ரீ மங்களேசப் பெருமான் திருவிளையாடல்களிருக்க, தேவி மங்களேஎச்வரியின் திருவிளையாடல்களைக் காண்போம்:-

ஊழ் வினைப்பயனால் குழந்தை பாக்கியமற்றவர்கள் உள்ளன்புடன், எம்பிராட்பி மங்களேச்வரியை வழிபடுவராயின் அவர்களுக்கு, தேவி தாமே மகளாக அவதரித்து அவர் மனக்குறையைப் போக்குவாள் என்பது முன்னோர் முடிபு. அவ்வனம் ஐந்து முறை அவதரித்து அடியார்களை ஆட்கொண்டதாக இத்தலத்தின் 'பிள்ளைத் தமிழ்' எனும் அரிய நூல் கூறும் அக்காலங்களில் தேவிக்கு விளங்கிய பெயர்களாவன:-

(i) உலகம் பதினாலையும் பெற்ற மங்களேச்வரி,

(ii) பஞ்சின் மெல்லடி கொண்ட திரைசேர் மடந்தை,

(iii) கங்கா குலத்தில் வருபூணாரும் வனமுலைக்காரிகை,

(iv) கஞ்சமுக வணிகனருள் பொன்னுற்ற பூண்முலைக் கன்னி

(v) செஞ்சொல் வளர் புகலூரில் (போகலூர்) அந்தணகுலத்திலகச் சிராக்கியம் பெருமுகுந்தன் செல்வி.

(16) அன்னை மங்களேச்வரி, மேலே சொன்ன செஞ்சொல் வளர் புகலூரில் முகுந்த மறையோன் செல்வியாய் அவதரிக்க, மங்களேசப் பெருமான் அம்மையைத் திருக்கல்யாணம் செய்து கொண்ட சரிதம் மிகவும் புனிதமானது. மிகமிகத் தொன்மை வாய்ந்த ராஜரத்ன சதுரர் வேதி மங்கலம் என்ற பெயர் கொண்ட போகலூரிலுள்ள திரிஸ்வதந்திர அந்தணர்கள் (முக்காணி சமூகத்தினர்) தொன்றுதொட்டு பரம்பரையாய், பக்தி பூர்வம், இதர இடங்களிலுள்ள தம்மவருடன், போகலூரிலிர்நுது திருவுத்தரகோசமங்கை வந்து, சைத்ரோத்ஸவ காலத்தில், தேவி அவதார தினம் முதல் திருக்கல்யாணம், ஐந்தாம் நாள் 'பூதத்தலம்' வரை, பெண் வீட்டார் என வழங்கும் பெரும் பேற்றுடன், நடராஜப் பெருமான் திருமுன்பு தங்கி, தேவி திருக்கல்யாண வைபவத்தை நடத்தி வருகின்றனர். ஸேதுபதி மஹாராஜா அவர்களும் அம்மகிபன் பரிவாரங்களும் முப்போதும் திருமேனி தீண்டும் சிவார்சாரியர்களும், அத்தல மஹாஜனங்களும், பேராதரவு தந்து உதவி வருகின்றனர். இது எம்மனோர் செய்த தவப்பயன்.

(17) இப்புண்ணிய சரிதம் எழுத்துவடிவில் இது வரை வெளியிடப் பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, கர்ண பரம்பரையாய் போற்றப் பெற்றும், பல மஹான்களால் பிள்ளைத் தமிழ் முதலிய பாடல்களால் துதிக்கப் பெற்றும், தேவி உபாஸகர், சிவபூஜா துரந்தரர், மெய்ஞானி, பரம பாகவதோத்தமர், எனப் போற்றப் பெற்று, ஜடாயு தீர்த்தம் என்ற மேல் அரவன் குளத்தில் ஸோமநாத பாரதி என்ற திருநாமத்துடன், சுமார் 75 வருடங்களுக்கு முன் வாழ்ந்த பெரியார் அருளிய பாடல்களையும் ஷை தேவஸ்தானத்தின் சைத்ரோத்ஸவ காலத்தில் தேவி தபசுக் காக்ஷியன்று வாசிக்கப்படும் பட்டயத்தையும் ஆதாரமகக் கொண்டு, தேவி திருக்கல்யாண வரலாறு மங்களநாதன் மங்களேச்வரி கிருபையால் வரையப்பெற்றிருக்கிறது. இவ்வைபவம் இன்னும் மேன்மையுற விளங்க வேண்டும், எல்லோரும் இப்புனித வரலாற்றினைத் தெரிந்து நல மடைய வேண்டும் என்ற பேரவாவினாலும், மங்கள நாயகி ஸமேத மங்கள நாயகன் அருளாலும் இந்நூல் வெளியிடப்படுகிறது.

உ

சிவமயம்

ஸ்ரீ மங்களேச்வரி ஸமேத ஸ்ரீ மங்கள நாதஸ்வாமி துணை.

ஸ்ரீ மங்களேச்வரி திருக்கல்யாண வரலாறு.

(1) ஸ்ரீ ஸேதுபதி, சதுர்மறை போற்றும் சதுரன், அறம் வளர்க்கும் திருவாளன், எனப் பல புகழ் பெற்று விளங்கும் இராமநாதபுரம் மகாராஜா அவர்களுடைய பரம்பறை நிர்வாகப் பொறுப்பில் விளங்கும் **'திருவுத்தர கோச மங்கை'** தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மங்களேச்வரி ஸமேத ஸ்ரீ மங்கள நாதஸ்வாமி தேவாலயத்தில் தொன்று தொட்டு நடைபெறும் சைத்ரோத்ஸவத்தில் கொண்டாடப் பெறும் திருக்கல்யாண வைபவம் மிகவும் சிறப்புற்றது. அதன் வரலாற்றினை பெரியோர் பலர் புகழ்ந்து, மகிழ்ந்து இன்புற்று பெரும் பேறு பெற்று விளங்குகின்றனர். அது வருமாறு:

(2) "சீர் மருவும் ஆலவாய்ச்சிவபிரான்
அடிமலர்கள் சிந்தை மறவாத மகிபன்
சீதமதி வாரவிரதத் தொழுகு நெறியி
னான் திகழ் வெண்ணீரக்க மணிபூண்,
ஏர்மருவு ககுண பாண்டியன்" எனும் அரசர்

கோன் தென் பாண்டிய நாட்டின் அதிபனாய் விளங்கினான். ஒரு நாள் தேவகன்னியர்கள் பாண்டிமாதேவியிடம் வந்தனர். தேவி மிகவும் மகிழ்ந்து அவர்களை ஆவலுடன் அமுதருந்தப் பிரார்த்திக்க, அவ்வான் மடந்தையர், "தேவி! அரிய மகவு, பூஜை அந்தணர் இவை இல்லாத இடத்தில் அருந்தோம்" எனப்பகர்ந்து மறைந்தனர்.

(3) தேவி மனம் வருந்தி, மன்னனிடம் முறையிட்டனன். மன்னன் தன் அமைச்சரிடம் "பேசமுயர் மறையவர்கள் எங்குளர்" என, அமைச்சர்கள் பணிந்து:-

"செழிய மகிபா கேள்! அந்தி பகல், திருமால் அயன் மகிழ, இந்திரன், முனிவர், இமையவரும் புகழ பாரில் எவரும் பணிந்து சூழ்ந்திட, பலவளம் மிகுந்து பரவி வாழ்ந்திடக் கோரி, கோல மலரினனாம் பிரமன் கங்காதீரத்தில் மஹா தபஸ்விகளாய் விளங்கிய திரிஸ்வந்திர முனிவராம் ஈராயிரவரை, செந்திலம், பதியுறை, செவ்வேள் அடி பணியப் பணித்தனன். செந்திற் செவ்வேள், அம்முனிவரை அன்புடன் அழைத்து "இனி எம்முடன் கலந்து வாழ்வீர்" என்று அருளினன். அம் மாதவத்தோர், திருச்செந்திலம் பதியில் சிறப்புற விளங்குகின்றனர். அவர்களிற்சிலரை இவண் அழைத்து வரல் நலம்" என்றுரைத்தார்.

இங்ஙனம் அமைச்சர் உரைக்கக் கேட்ட மன்னன், மகிழ்ந்து, “அந்தி வெண்மதி சூடும் அத்தன் அருளால், பந்தியாய் விருது சேனை, பாவலர் அமைச்சரோடும், செந்திலம் பதியை நோக்கி விரைந்தனன்.”

(4) ஆங்கு, செந்திலம்பதி இறைவன் கோபுரத்தைக் கண்டு, தேரைவிட்டிறங்கி முருகவேள் திருமுன் வந்து பிரார்த்திப்பான்:-

“சீராயிற் செவ்வேனே! சிந்தையிற் கருணைகூர்ந்து, சூரனாதியரை வென்று, சுரர் தழைத்தோள்கள் செய்தாய், உத்தமகுமரா மிக்க உயர் குலத்தவர்கள் தம்மை, சித்தமதிரங்கித்தந்தாள். சிவபிரான் அருளும் மைந்தா! மெத்தவும் மழை, மகப்பேர் மேதினி செழிக்க அன்பாய், நித்தமும் அவரைப் போற்றி நிகரின் வாழ்வுறுவேன்.”

ஞானஸ்கந்தனாம் முருகன் மன்னன் மொழிகேட்டு திருவாய் மலர்ந்தருளுவான்:-

“மதி மிகும் அரசே! இத மாதவர் புகழின்மிக்கோர், அதிதவமுடையார், செல்வம் அனைத்தையும் பெறும் நம் அன்பர், சதிருடை இவர் தம் மேன்மை சாற்றிடுந்த கையதன்று, செந்திலம் பதியில் கந்தம் சேவடி துதிப்பார், என்றும் பக்த எவ்வினையும் நீக்கும் பான்மையும், பதுமன் முன்னாள் தந்தவர், கபடமில்லாத் தன்மையும் இவரைப்பணிந்தார். சிந்தையில் நினைத்தயாவும் சேர்தரும்.”

மேலும் மறையவரை நோக்கி முருகவேள் அருளுவார்:- மாதவ வேதியரே! வழுதியாம் மன்னவன் நாட்டி வெல்லாம், ஆதரவாய் மழையின்றி, அவன் மிகவே வருந்தி, உம்தமை அழைத்துக் கொடுபோய், உய்ந்திட வேணும் என்று, பங்கய வாவிகள் சூழ் மதுரைப் பார்த்திபன், வந்திறைஞ்சி, உம்மை அங்கு வரவழைத்தான். உமை ஆதரித்து மிகவும் அன்பு செய்வான், ஆவலுடன் ஏகுவீர் சிலர் அங்கு.”

செவ்வேள் அருள் கேட்ட மறையவர், மனமுவந்து “இறைவ! உன் சித்தம்” எனப் பணிந்து, எம்மின் பதினென்மர் வன்மை மிகும் செழியன் நகர் வாழ்வுறச் செல்வோம் என இசைந்தனர்.

(5) பாண்டிமகிபன், அந்தமாமுனிவரைப் புகழ்ந்து போற்றி முறை முறை வணங்கி “நீங்கள் ஸந்ததம் யான் ஈடேறச் சதிருடன் கருணை செய்தீர்,” என்று எதிரிலாத்துசெய்து, மன்றலம் தொடையல் வேந்தன் மகிழ்ந்து வேலவனைப் போற்றி, “இன்று என் தவம் ஈடேற இவர் தமைத்தந்தீர், எந்தாய்!” எனத்துதித்து, சென்றிட வருதி பெற்றான். மனைவியர், புதல்வர் மற்ற மகவொடும் குடும்பத்தோடும், மறையவர்க்கிறைவன் போன்ற கனமிகுல கருவாயுள்ளான், கருணையான் முகுந்தன், என்போல், இனமொடு வருதலுற்றான். மன்னவன் அவர் தமைச் சிவிகையேற்றி,

பக்தியாய் எவருஞ் சூழ, பகரும் வாத்தியங்களார்ப்ப இந்திரன் பவனியென்ன, மதுரையம்பதியாம் திரு ஆலவாய் வந்தடைந்தனன்.

(6) ஆங்கு, மன்னவன் தன் தேவியோடு மறையவர் மலரடி வணங்கி, ஆசனத்திருத்தி, அங்கமோடு அதிதி பூஜை அனைத்தையும் செய்து, மிகமிகத் துதித்து, தேன் மலர்கள் சொரிந்து, தேகம் புளகித்து பள்ளகம் அணிந்திடும் பரமன் அருள் இதுவென்று பணிந்து சீதமதி தவழ சிறந்த அவர்களுக்கு, சிகர மாளிகையோடு சகலமும் பணித்தான். மாதவ மறையோர் ஆலவாய் அண்ணலை வணங்கித் துதித்து "அங்கயற் கன்னி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் அரசே, மன்னவன் நாட்டில், மழை மிகப் பெய்யவும், மன்னன் மகப் பேறின்பம் பெறவும் அருளீர்!" எனக்கசிந்துருகிப் போற்றினர். அண்ணன் அருளால் மழை குறைவறப் பொழிந்தது. பாண்டிய மாதேவி மகப்பேறுற்றாள். பாண்டியன் கோதறக் கொழித்தது. பூதலமும் வளங்கள் ஒங்கிச் செழித்தது.

(7) இங்ஙனம் முகுந்தனாதி மறையோர் ஆலவாய்த் திரு நகரில் வாழ்ந்து வரும் நாளில், மாதவ முகுந்தன், சுந்தரேசனை அன்புறப் பூசித்து அனுதினமும் நெடுமறையால் துதித்து, "பாதி மதியணிந்த பரமனே! நின் தாள் போற்றி வேதியற்கிரங்கும் வேதநாயகனே போற்றி, முருகன் அருளால் உமைப் போற்றும் பாக்கியத்தைப் பெற்றோம், உபயகோத்திரத்தார் வியந்து நற்கதியடைய, வளந்தரு மைந்தருக் கதிகமாம 'புதல்வி' வாய்த்திடில் என மறை புகலும், ஆகையால் எமக்கோர் பெண் சேய் அருள இறைஞ்சுகின்றேன்" எனப் பணிந்து, கசிந்துருகினான் கருணைக் கடலாம் சுந்தரேசன் "அருந்தவ வேதியனே! குமரனடி போற்றும் குணக்குன்றே மெத்த வருந்தினை நீ, மேதியினின் புகழ் பெறும் உத்தரகோச மங்கை என்ற ஒரு ஸ்தலம் உண்டு அங்கு நீ சென்று தவன் செய்வாய். உன் விருப்பம் நிறைவேறும்" என அசரீரியாய் அருளினார்.

(8) மன்னவன் இதையறிந்து, மறையோர் தம்மை மணிச்சிவிகைகளில் ஏற்றி, நன்னய விருது மற்றும் நகருள்ளோர் பலருஞ்சூழ, மின்னனையார்களாட, மிகுகவிவாணபாட, மந்திரி தலைவர் மற்றொவருஞ் சூழ, தண்டிகை மீது தம் தனத்தொடுங்கூடி, எத்திசையும் புகழ, திருவுத்தர கோச மங்கைத் தலத்தை அடைந்தனர்.

ஆங்கு செழியனும் மறையோரும், குன்றவிற் கடவுளாரைக் குறித்து எங்கும் நோக்கம் கொன்றை கூவிளம், இலந்தை கோதிரைச் செண்பகங்கள் பூத்து நின்ற மாபெருஞ் சோலையைக் கண்டவர், அதனுள் திங்கள் சூடிய அத்தன் எழிலுறு இலிங்க வடிவாய் விளங்கியதைக் கண்ட மன்னனும் கண்குளிர தெரிசித்துப் போற்றினர். முகுந்த மாமறையோன் இலிங்கத் தெம்மானை முறையாய் வணங்கி "மங்களேச்வரா!

எனத்துதித்து நின்றான். மன்னனும் மற்றையோரும் போற்றி நின்றனர். இலிங்கத் தெம்மான் இவ்வடியவர் பால் இரங்கி அசரிரியாய் அருளுவார்:-

"எமை மிகத்துதித்துப் போற்றி
எழில் மங்களேசா வென்றே
அமையவோர் நாமஞ் சூட்ட
அக கனி மகிழ்ந்தோம் நாம்
இமையவர் புகழ நாளும் இத்தவம்
பேர் பெற்றோங்க

முகுந்தமா மறையோய்! உமையவன் உனக்குச் சேயாய் உதிப்பன் உம் குலம் தழைக்க".

இத்திரு வாக்கினைக் கேட்ட மன்னனும் முகுந்தனாதி யோரும், ஆனந்தக்கடலில் மூழ்கினர். 'மங்களநாதா, என மறைசொலித்துதித்தனர். நாதனாற்கு அபிஷேகங்கள் செய்து தூயநற்கலசமாட்டி, கோதுடை முந்நூல் கொன்றைக் கூவிளம் பூச்சூட்டி ஓதன வகைகள், ஓதம் நிவேதனங்கள் செய்து, மறைவழாது அர்ச்சித்து ஏத்தி மகிழ்ந்திருந்தனர்.

(9) பாண்டிமன்னன் நடந்தன வெல்லாங்கண்டு, மனமுவந்து முகுந்தனிடம் மொழிவான் "மறையவரே! மதுரையம்பதி அண்ணல் உமக்கு உரைத்த புகழ்பெறும் இத்தலத்தில், அருந்தவத்தோர் மகிழ, அடர்ந்த இலந்தைகளும் திருந்திய செண்பகமும், திகழ் கொன்றைக்கூவினமும், தாதவிழ் மாமலரும் தடம் கனைத்தாமரையும், ஓதரிய நந்தனமும், ஒலிமிகு வண்டினமும், முக்கனியுந் தென்னையும் மொய்த்தன சோலையெங்கும், முனிவரும் உம்பரும் குறைவற ஈசன் அருள்கொண்ட இத்தலம் மிகுந்தமகிமையுள்ளது. இத்தலத்துக்குக் கருகில் நீங்கள் வதிந்து ஈசனைப் போற்றி வாழ்வீர். அனுதினமும் அவன் தாள் வணங்கி அருளொடு பூஜை செய்வீர், மங்கள நாதன் என்ற மறை முடிமெய்ப்பொருளை, உங்கள் அருளால் எளியேனும் தரிசித்தேன். மங்களேசப்பெருமானுக்கு சிறந்திடும் ஆலயமும் குறைவின்றி அமைத்திடுவோம், என்று அங்ஙனமே அன்று முதல், ஆலயம் திருப்பணி செய்யலுற்றான். இமையவரும் வியக்கும் வண்ணம் மங்களேசப்பெருமான் ஆலயம் வளர்ந்தது.

(10) முகுந்தனாதியோரை, மன்னன் வடதிசையில் குறித்த ஓர் இடத்தில் இருக்கச் செய்து, அந்த மாதவத்தோர்களுக்கு ஆச்சிரமங்கள் அமைத்து, துன்று பல்குடிமடங்கள், சோலை பூவனங்கள், வாவி முதலிய நல்வளங்கள் எல்லாம் இசைந்திடச் செய்தான். சாலைகளும் சத்திரங்களும் கூபம் சதிச் பெருந்தடங்களும் நிறுவினான். வேலைசெய்திடுவோகெல்லாம் காலை மாலையும் பால் நல்கும் கபிலைகல் ஒவ்வொருவர்க்கைந்தும், வெண்கலம் ஆடையோடு அணிபணிகளும்

ஆகிய எல்லாம் வழங்கினன். மறையோரெல்லாம் மன்னவன் நிறுவின அத்தலத்தை ராஜரத்ன சதுர்வேதி மங்கலம் என நாமஞ்சூட்டினர். மன்னவனைப் புகழ்ந்து போற்றினர்.

[குறிப்பு:- இப்பொழுது சத்திரக்குடி ரயில் நிலயத்துக்கு வடபாலிருக்கும் போகலூர் (புகலூர்) என்னும் கிராமமே ராஜரத்ன சதுரர் வேத மங்கலம்.]

மன்னவனும் முகுந்தனை வணங்கி "உயர்ந்த சாண்டில்ய கோத்திரத்தோய் உவமயில் ஆகவலாயன விளங்கு சூத்திரங்கொள்வோய்!

இனி உமக்கு உமை சேயாய் அவதரிப்பானென மங்களேசன் அருளினமையால், அவள் ஆண்டிட பூமிகள் சில அளிப்போம்" என்றுரைத்து, ராஜரத்ன சதுர்வேதி மங்கலத்தல முதலாய பதினெண் ஏந்தல் பூமியை முகுந்தனுக்கு அளித்தான். மேலும் புகலுவான்:- "நீவிர் புதுமை மங்களநாதற்கு பூஜை உற்சவங்கள் எல்லாம் இகமுற நடத்தி என்றும் வாழ்ந்திருப்பீர். உங்கள் ஆச்சிரமங்களில் உரைத்த மெய்யறங்கள் அங்கமொடு அனுதினமும் செய்து, மங்களேசன் மலரடி வணங்கும் உங்களுக்குவமை நீங்களேயென வாழ்வீர், முக்கண்ணன் அருளால், முன்னவிர் சிகையும் அங்க மா மணியும், அணியும் வெண்ணீறும் மறை தொனி இசைக்கும் மகிழ்த்திருவாயும், இறைபுகழ் மார்பில் இலங்கு முன் நூலும் கருதிய தெவையும் கருணையாய் அளிக்கும் பரிதிபோல் விளங்கும் பான்மையரே! சிவனொடு சக்தியைச் சிந்தையில் வணங்கும் தவமுனிவோரே, நீவிர் இனிது வாழ்ந்திடுவீர். திசைமணி கொழிக்கும் திருச்செந்தில் முருகன் விசைமலர் அடிதொழும் விரதமாதவரே! மண்டலத்தில் மறைபுகழும் உங்களைக் கண்டவர் எல்லாம் களித்திடும் வடிவும் பார்த்தவர் எவரும் பணிந்திடும் தன்மையுளீர்" எனப் புகழ்ந்த பிரியா விடை பெற்று தனத்தொடு அந்தமாமதுரை சென்று அகமகிழ்ந்திருந்தனன்.

மன்னவனையனுப்பி மறையவரெல்லாம், நன்னயப் பொருள்கள் நயம் பெற அடைந்து, மங்களேசன் மலரடி வணங்கி அங்கமாம் பூஜை அனுதினமியற்றி, அரிய நெய்வேதனங்கள் அனைத்தையும் செய்து, உரிய மைந்தர்களோடு ஆதரவுடனே அரனையே துதித்து, தமக்குச் சேயாய் உமையவள் உதிக்கும் நன்னாளை நோக்கி அருந்தவம் செய்து வந்தனர்.

தேவி உமை தவமும் இறைவன் காட்சியும்.

(1) உமா தேவி ஒரு நாள் பரமேச்வரரிடம் தனக்கு வேதாகமங்களின் உண்மையை உபதேசிக்க பிரார்த்தித்தாள். இறைவன் இசைந்து உபதேசம் செய்யும் போது தேவி சிறிது கவனமிழந்தாள். இறைவன் சினங்கொண்டு "எம் உரை மறந்தாயாகையால், பூவுலகில் மானுடப் பெண்ணாகப் பிறக்கக்கடவாய், பின், உன் தவமகிமையால் எம்மை அடைவாய்" எனச்சாபமிட்டார். அதன் படி உமை மீண்டும் பர்வதராஜன் மகளாய்த் தோன்றினாள்.

(2) அந்த ராஜகுமாரி, சகலபுவனகர்த்தாவாய், சர்வக்ஞராய், ஒப்பில்லாதவராய் விளங்கும் மூர்த்தியையே பதியாகப் பெற வேண்டும் என்ற தம் பேராவினை பர்வதராஜனிடம் பகர்ந்தாள். ராஜன் நவிலுவான்:- "அம்மா தாயே! எங்காகிலும் பெரியவர்களாய் தபோதனர்களையெல்லாம் அறிந்தவர்களாய் விளங்கும் முனிபுங்கவரிடம் சென்று அவரை வணங்குவாய். அவர்கள் அனுக்கிரகத்தால் மூவற்கும் முதல்வனாய் முழுமுதற் கடவுளாய் விளங்கும் மங்களேசனை உன் பதியாய் அடைவாய்", என்று மொழிந்தனன். தேவி மனம் பூரித்து, சங்கினி பாப்பிணி என்ற தம் தோழியருடனே விதேச யாத்திரையாக பூர்வதிக்கில் வருகையில், மங்களநாதன் வித்தக வடிவினனாய் எதிரே தோன்றினான். தேவி அவ்வயோதிகரைப் போற்றி வணங்க அவர்:-

"பெண்ணே! பெண் துணையுடனே எவ்விடம் செல்கின்றாய்?" என வினவினார்.

(3) தேவி அந்தத் தபோதனரைக் கண்டவுடனே, நாம் தேடியப் பொருள் முன்னே வந்ததென்று மகிழ்ந்து, இறைவன் திருவருளை வியந்து

(i) "பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் யார்க் கெடுத்துரைப்பேன்
ஆண்ட நின் அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே."

(ii) வம்பனேன் தன்னை ஆண்ட மாமணியே
மற்று நான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்கு
உணர்விறந்து உலகம் ஊடுருவும்
செம் பெருமானே! சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை யுறை சிவனே
எம் பெருமானே என்னை ஆள்வானே
என்னை நீ கூடிக் கொண்டருளே.

(iii) "பாடிமால் புகழும் பரதமேயல்லால்
மற்று நான் பற்றிலேன் கண்டாய்
தேடி நீ ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப் பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னொடு உவப்பது முன்னை
உணர்த்துவதுக் குறுதி,
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரியாயே"

என இறைவனைத் துதித்து அந்தத் தபோதனர் திருவடிகளிலே பணிந்து வணங்கினாள்.

(4) இத்திரு வாசகத்தைக் கேட்ட அத்தபோதனர், புன் சிரிப்புடன், "பெண்ணே! வேண்டுவது யாது" என, தேவி, "தபோதனரே! என் மனத்திலிருக்கும் சிந்தனையை நீர் அறிந்திருப்பீர். நான் நினைத்துப் போகிற கர்த்தாவும் நீரே, என் மனத்தில் நினைத்தது நிறைவேறத் தக்க உபாயம் சொல்ல வேணும்" என மொழிந்தாள்.

இவ்வுரை கேட்ட தபோதனர், "பெண்ணே! பூ மண்டலத்துள்ளே புண்ணிய க்ஷேத்திரமாய் தக்ஷிண திக்கின் முன் ராஜாந்திர கர்ப்பத்தில் பரமேஸ்வரிக்கு பஞ்சாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்த சித்தக்ஷேத்திரம் எனப்பெயர் பெற்றிருக்கிற தலம் ஒன்றுண்டு. பத்ரிகாவனம் என்றும் தக்ஷிண காசி என்றும், ரத்ன ஸபையில் ரகஸ்ய நடனம் செய்த தலம் என்றும், பிரம்மா, விஷ்ணு ருத்ராதி, மும்மூர்த்திகளும் அங்கே பூஜை செய்து அனேக வரப்ரஸாதம் பெற்ற இடம் என்றும் பூதலத்தில் போற்றப் படுகிறது. அங்கு அணுமாத்திரம் செய்யும் புண்ணியம் மேருவுக்குச் சமானமாகுமென்றும், பெரொயோர் திருக்கைலாயத்தில் புராண வசனம் செய்யும் போது

"தாதாடு பூஞ்சோலை தத்தாய் நமையாளும்
மாதாடு பாசகத்தன் வாழ்பதி, என் கோதாய்!
பக்தரெல்லாம் பார் மேல்
சிவபுரம் போல் கொண்டாடும்
உத்தரகோச மங்கையூர்"

என்றும் போற்றுத் தன்மையுள்ளது.

நாம் அத்தலத்தின் மகிமையெல்லாங் கேட்டு மங்களேசனை தரிசனம் செய்ய வரும் மார்க்கத்தின் உன்னைக் கண்டோம். கவலைப்படாதே உன்னுடைய அபிஷ்டம் அம்மங்கள புரத்தில் நிறைவேறும். ஆகவே அத்தலஞ் சென்று மங்களேச்வரனை தியானம் செய்து தவம் புரிவாய்," என மொழிந்து, ஜபவடமும் விபூதிப் பையும் பிரம்பும்

தேவியிடம் கொடுத்து, தன்னுடன் அழைத்து வந்து, மங்களபுரத்தின் வாயிலிலே சேர்த்து விட்டு மறைந்தனர்.

(5) பர்வத ராஜகுமாரி திடுக்கிட்டு, வந்த தபோதனர் சுவாமியென்று அறியாமற் போனோமே, அக்ஞானத்தால் எதிரே நின்று வார்த்தை சொன்னோமே, என்று நடந்தனவெல்லாம் நினைந்து பெருமூச்சிட்டு உடலெல்லாம் மயிர்கூச்செறிய, கண்களில் ஆனந்தக் கண்ணீர் மங்க, மங்களநாதன் திருமுன்பு நின்று தோத்திரம் செய்வாள்:-

"மறை நவிலாதி போத மஹேச, மங்களநாதா சரணம், விரிகமழ் கமலம் போலும் நின்னடிக் கீழ் விழுந்தனன், பவக் கடல் வீழ்ந்தேன், அறிவிலேன், என்னை அழுந்தாது எடுத்து அருள்புரிவூர்." இவ்வனம் பரவித் துதித்து, மூலலிங்கத்துக்கு அக்னி திக்கில் அம்மனுக்கு ஈசானத்தில் பஞ்சாக்னி மத்தியிலே ஒரு கும்பகம் வைத்து, அதன் மேல் எலுமிச்சம் பழத்தை வைத்து, அதன் மேல் ஊசியை நிறுத்தி, அவ்வூசி முனையில் நின்று அருந்தவம் புரியலானாள்.

(6) பர்வத ராஜகுமாரி இவ்வாறு இயற்றும் தவத்தை, அகண்ட சச்சிதானந்த மூர்த்தியாகிய மங்களேஸ்வரப்பெருமான் கண்டு தயை புரிந்து, நாரதர் முதலானோர் பிரார்த்தனைகளையுங் கேட்டு கருணா வருணாலய கிருபானந்தராகிய பெருமான், கந்த நந்தன குணங்களோடு ரிஷபாருடராய் காட்சி தந்து கடாக்ஷித்தார். தேவி அத்தரிசனம் கண்டு மெய் சிலிர்த்து, மனங்கசிந்து, "வேத நாயகனே போற்றி மறுசமயங்கள் மாய பேதகம் செய்தாய் போற்றி, யான் செய்த பாதகம் அனைத்தும் தீர்க்கும் பரா பரா போற்றி" எனத் துதித்துப் பின்னும்,

(i) "இருதலைக் கொள்ளியுள் ளெறும் பொத்து
நினைப்பிரிந்த, விரிதனையேனை விடுதி
கண்டாய், வியன் மூவுலகுக் கொகு
தலைவா! மன்னுமுத் தரகோச மங்கைக் கரசே
பொரு தலை மூவிலை வேல்வலனேந்திப் பொலிபவனே.

(ii) வெள்ளத்துள் நாவற்றி யாங்குன்னருள்
பெற்றுத் துன்பத்தின்றும் விள்ளக்கில்வேனை
விடுதி கண்டாய், விரும்பும் அடியார்,
உள்ளத்துள்ளாய், மன்னு முத்தர கோசமங்கைக் கரசே.

கள்ளத் துள்ளேத் கருளாய்
கனியாத கனி யெனக்கே.

(iii) பொருளே தமியேன் புகலிடமே நின் புகழிகழ்வாய்
வெருளே யெனை விட்டுதி கண்டாய்
மெய்மையார் விழுங்கும் அருளே பணி

பொழிலுத் தரகோச மங்கைக் கரசே
இருளே வெளியே இக பரமாகி இருந்தவனே.”

எனப் பிரார்த்தித்து, இறைவன் திருநோக்கைக் கண்டு இறைஞ்சினான்.

(7) தேவியின் திரு வாசகங் கேட்டு இறைவன் பர்வத ராஜகுமாரியைப் பார்த்து, “வாராய் பெண்ணே! உன் தவத்தின் மகிமையால் நாம் பிரசன்னமானோம். நம்மைக் குறித்து, இவ்விடத்துக்கு வடபாரிசத்தில் ஒரு தீர்த்தம் உண்டு பண்ணி, பெண் ஜன்மத்திற்கு உகந்ததான, பார்த்திப லிங்கத்தைப் பூஜை செய்வாயாக. அதன் பயனாய், நீ முன்னம் நம் ரகசிய உபதேசத்தை மறந்து, மறுமுறை கேட்டதால் நாம் உனக்கிட்ட சாபத்திற்கேர்ப்ப, இந்த மங்களபுரத்தின் வடபால், ராஜரத்ன சதுர்வேதிபுரியின் தவமியற்றும், மறையவன் முகுந்தன் செல்வியாய் அவதரிப்பாயாக, உரிய காலத்தில் நாம் அவன் வந்து உன்னைத் திருமணம் புரிந்து ஆட்கொள்வோம்”, என்று அநுக்ரஹம் செய்து மூலலிங்கத்திலே மறைந்தார்.

இம் மாபெருங் காட்சியை உம்பரெல்லாங் கண்டு புகழ்ந்து, மொய் மலர்கள் பொழிந்தனர். உடனே தேவி இறைவன் அருளியபடி தீர்த்தம் அமைத்து பார்த்திப லிங்க பூஜையுஞ் செய்து பரிசுத்த மடைந்து ராஜரத்ன சதுர்வேதி புரியில் செந்திற செவ்வேள் அன்பனாம் மாமறையோன் முகுந்தனுக்குச் சேயாக, தாமரை மலரினில் தோன்றத் திருவுளம் பற்றினாள்.

மங்கள் நாயகி அவதாரம்.

(1) ராஜ ரத்ன சதுர் வேத புரியில் மறையவன் முகுந்தன் தம்மனை விமலையோடும் சுற்றத்தோடும் குறைவுறாது தவமியற்றி வந்தான். ஒரு நாள் இரவு, முகுந்தன் கனவில், அவ்வூர் தடாகத்தில் தாமரை மலரில் குழந்தை வடிவாய்த் தோன்றுவதை தேவி உணர்த்தினாள். முகுந்தன் பேரானந்தத்துடன் விழித்தெழுந்து, அத்தீர்த்தம் கரை சேர்ந்து புனித நீராடி, உவந்து செய் கடன் முடித்து சிவபூஜை செய்து, தவமணக் கமலங்களை இமையாது உற்று நோக்கிப் பிரார்த்திக்க, ஆங்கு ஒரு கமலத்தில் பேரொளி தோன்றியது. உடனே அக்கமலம் மலர்ந்தது. அதில் தேவி குழந்தை வடிவாய் விளங்கினாள். முகுந்தன் விரைந்து சென்று அத் தெய்வக் குழந்தையை வாரி யெடுத்தான். தேவ கீதம் முழங்கியது. வானத் தண்டரும் மலர் மாரி சொறிந்தனர்.

முகுந்தன் குழந்தையைக் கையிலேந்தி தம்மனை சென்று தன் தேவி விமலையிடம் கொடுத்தான். விமலையும் மெய் சிலிர்க்க மகவை வாங்கி மார்போடனைத்து உச்சி முகர, கொள்கைகள் பால் சுறந்தன. அனைவரும் ஆனந்த முற்றனர். முகுந்தன் விதிப்படி விரைதானங்கள், அடைக்காய் பொன் பூ சந்தனம்

மலர்கள் பழங்கள் இனியபக்ஷணங்கள் பூணாடை முதலியன விதி வழுவாது மறையோர்க்கும் மற்றோர்க்கும் நல்கினான். விதிமுறை உண்டியாதி எவர்க்குமே அளித்தான். விமலையும் குழந்தையை வண்ண மலர்த் தொட்டிவிட்டு மங்கையர்கள் புகழ்ந்துபாட தேவரெல்லாம் மகிழதாலாட்டினாள்.

(2) பின்னர், ஜாதகர்மம், நாமகர்ணம் முதலான வேதமுறைச் சடங்குயாவும் வியப்புற, முகுந்தன் செய்தான். மங்கள நாதன் அருளால் தோன்றிய மகவாகையால் 'மங்களேச்வரி' என்னும் மறைதொழு நாமமுஞ் சூட்டினான். "மங்களக் கவிஞர் பாட மற்ற யாவருங் கொண்டாட சங்கரனருளால் மிகச் சதிருடன் யாவரும் விளங்கினர். மங்கள நாயகி வரவால் அத்தலம் செழித்தது. மக்களெல்லாம் மகிழ்ந்தனர். யாவரும் தேவி, தம் தம் குழவி எனக் கொண்டாடினர். முகுந்தனாதியோர் தமக்கு கிட்டிய இப்பெரும் பேற்றை நினைந்து நினைந்து யாவும் செந்திலம் பதியுறை வேலவன் அருளெனப் போற்றி இன்புற்றிருந்தனர்.

ஸேது மன்னனும் முகுந்தனும்

(1) ஸேது என்பது ஸ்ரீ ராமபிரான் கடல் மேலிட்டு திரு அணை. அவர் ஸேது பந்தனம் செய்தருளிய போது அவரைத் தொழுது நின்றான் மறவர் தலைவன் ஒருவன். ஸ்ரீ ராமபிரான் கருணா கடாக்ஷம் அவன் பால் விழுந்தது அதன் பயனால் ஸ்ரீ ராமபிரான் அத்தலைவனை நோக்கி "தலைவனே நீயே எம் ஸேதுவை பரிபாவிப்பாய். நல்லறங்கள் அத்தனையும் வளர்த்திடுவாய். எந்நாளும் 'ஸேதுபதி' எனும் நாமஞ் சூடி நல்லாட்சி செய்திடுவாய்" என அருள் பாலித்தார். அங்ஙனமே ஸேதுபதிகள் வாழையடி வாழையாய் விளங்கி ஸேது உட்பட்ட இராச்சியத்தை நெறிதவறாது ஆண்டு வந்தனர். அவர்கள் புகழ் பரதக் கண்டம் முழுவதும் பரவியது. அம்மன்னவரைப் பற்றிய பல தமிழ்ப் பாக்களில் இரண்டு சிந்தையிற் கொள்ளத் தக்கவை.

* (i) ஸேதுபதியென்று நரஜென்மமெடுத்தாய் கமல
மாதுபதிக்குன் பேர் வாய்க்குமா – பூதலத்தில்
நீயோ ரகுராமன் நின்னையே பெற்றெடுத்த
தாயே அருட் கோசலை.

(ii) ஆதிபதியான மண்டலாதிபதி வம்சபதி
நீதிபதி சத்ரபதி ஸமஸ்தானாதிபதி
விஜய நிறைந்தே நிற்கும்
மாதுபதி துரகபதி கஜபதி நராதிபதி
வளர்ந்தென் றேவைச்
சேதுபதி தரிசனமே ராமலிங்க தரி
சனமாச் செப்பலாமே.

[* இவை “சேதுநாடுந் தமிழும்” என்ற ரா. ராகவய்யங்கார் எழுதிய நூலில் காண்கின்றன.]

(2) இத்தகைய புகழ் பெற்ற விளங்கிய ஸேதுபதியின் நல்லாட்சிக்குட் பட்டிருந்தது திருவுத்தர கோச மங்கை தலம். பாண்டியனுக்குப் பின் நம் காவலன் ஸேதுபதியே என நினைந்து, முகுந்த மாமறையோன் ஸேதுமன்னனிடம் விரைந்தான். வந்த மறையவரை ஸேதுபதி முறைப்படி உபசரித்தான். முகுந்தன் புகலுவான்:-

“தேசமெலாம் போற்றும் தேவசிகாமணியே, மங்களேசனருளால், மங்களேச்வரி எமக்குக் குழந்தையாய் வாய்த்தனள். அவட்க்கு ஆன பாண்டிய மன்னன் சில பூமிகளை அளித்தனன். அன்று முதல் அவை ஆளுமையின்றித் தவிக்கின்றன. தரணியை ஆள்வதற்கு அந்தணனாலே தகுமோ? அந்தணர் தலமுறை தியானத்தையே குறியாய்க் கொண்டவர். ஆதலின், பாண்டியன் எமக்களித்த பூமியெலாம் நிலைபெற உன்னிடமே ஒப்படைத்தோம். இப்புவியை நீயே ஆள்வாய். நிந்தை மகிழ்ந்திட பண்புறும் ‘ஸேதுபதி’ யெனப் பாரிலுள்ளோர் புகழ என்னாளும் வாழ்ந்திருப்பாய். நீ மங்களேச்வரன் ஆளாய் மனமகிழ்ந்திட வாழ்வாய். ஸேதுபதியைக் காண்போர் செய்த பாவங்கள் நீங்கும்” என ஆசிர்வதித்து ‘மகிடமாமத்தனியாள்’ மந்திரத்தையும் உபதேசித்து “இன்று முதல் எம்மவரைக் காப்பாய்” என மொழிந்தான்.

(3) ஸேது மகிபன் மட்டில்லா மகிழ்வெய்தி “மறையவரே! உம் விருப்பம் நிறைவுறும். உம்மறை விளங்க மங்களேசனருளால் உம்மவரைப் போற்றுவோம் கவலை விடுக’ என மொழிந்து அன்பு செய்தான். அன்று முதல் உத்தரகோச மங்கைப் பரனை உண்மையுடன் அடி தொழுவான். சித்தம் உருகித் தினம் துதிப்பான். திருப்பணிகள் செய்து திறம்பட உற்சவங்கள் யாவும் குறைவரச் செய்யலுற்றான். யாத்திரை செய்வோர் மனங்களிக்கச் சத்திரம், சாலை, மடம், சோலைகள், சாரு நிர்ப்பந்தங்கள், மலர்வனங்கள் அமைத்து, எத்திசையும் புகழ ஆலயங்களும் நிறுவினான். நான்கு வர்ணாச்ரமிகள், நாவலர், பாவலர், காவலர் முதலாயவரை ஆதரித்தான். நிறைந்து பொருளும் பொன்னும் அனைவருக்கும் நல்கினான். இவ்வனம் ஸேதுமன்னன் மறை சொலும் அறங்கள் முப்பத்திரண்டினையும் சோர்விலாது என்றுமே செய்து வந்தான். மாசற உள்ளம் மகிழ்ந்து ஆதரவாய் பர தேவிதனை அன்புடன் பூஜித்து அடி தொழுதான். இல்லை யென்போர்க் கெலாம் இன்புற வழங்கினான். ஸேதுபதியார் செங்கோல் அறிந்து நம் கடையினிச் செல்லாதெனவே பல மிடிபா தங்கள் ஓடி ஒழிந்தன. மன்னன் ஆணையினால் மங்களநாதன் ஆலயத்தில் பொன்னார் சிகரங்கள் கோபுரங்கள் முதலியன வெல்லாம் பொருவிலாச் சிற்பர் அமைத்தனர். வேதியர் சூழ தவத்துடனே மேவி அரண்தாளினைத் துதித்து நீதி வழுவா முகுந்தன் நிதமும் புகழ ஸேது மகிபன் அரசாட்ச்சி செய்து வந்தான்.

மங்களநாயகி மணப்பருவ மெய்துதல்

(1) புகலூர் என்ற ராஜரத்ன சதுர்வேதி புரியின் மங்களநாயகி முகுந்தனாதியோரால் போற்றப்பட்டு இனிது வளர்ந்து வந்தாள். அனேக பணியணிந்து திங்களெனவே தினம் வளர்ந்தாள். அனேக பணியணிந்து திங்களெனவே தினம் வளர்ந்தாள். சேடியரொடு தினம் தினம் கல்விகள் யாவையும் கற்றறிந்தாள். இடைவிடாது இலிங்கத் தெம்மானை தினம் பூஜை செய்வாள். அழகுக் கழகெனவே வளர்ந்து மணப்பருவமும் எய்தினள். மங்களநாதனே தன் மணாளன் என மதித்து, வைகலும் அரனைப் பூஜை வழுவற இயற்றிப் போற்றி, சிவலோகநாதனைக் கொண்டாடி; தூய ஐந்தெழுத்தை ஓதி அருந்தவம் புரிந்து வந்தாள்.

மறையவன் முகுந்தனும் விமலையும் தம் மங்களப் பேரினாட்க்கு இசைந்த மணாளன் மங்களேசனே என அனவாதமும் மங்களநாதனைப் போற்றி வந்தனர். இறைவன் எப்பொழுது மனமிரங்குவான், என்று மங்களநாயகியை மணம்புரிந்து ஆட்கொள்வான் என்று நினைந்து நினைந்து வருந்தினர். “மங்களேசா! எமக்கு மங்களத் தரசியைத் தந்தாய். மணவாளன் அவட்க்கு நீயே. எந்தாய்.” என மங்களநாதனருளை எதிர்நோக்கித் தவமிருந்தனர்.

(2) கருனைக் கடலாம் மங்களேசப் பெருமான், மங்கையும் மறையவனும் தம்மை நோக்கித் தவம் செய்வதை மெச்சி, அன்று நாம் தேவிக்குக் கொடுத்த நல்வாக்கு நிறைவேறுங்காலம் வந்ததெனக் கருதி, ஒரு நன்னாளில், திரிசுதந்திர இளைஞனாக வடிவெடுக்கத் திருவுளம் பற்றினார். உடனே “கங்கை மதி ஜடை கரந்து, சிரசின் முன்னே கவின் சிகையின் கூவிளத்தைத் துலங்கக் காட்டி, நஞ்சு தங்குங்களந்தனை கண்கவருமணி வடந்தாங்கி மறைத்து, முந்நூல் பூண்டு, துங்க விடைதளை யகற்றி, கமலபத் துணை மலரில் மிதியடி துலங்க, தவமிகு முகுந்தன் முன்னே தோன்றினன். மண்டலத்தில் மாரன் என மதிக்கத் தக்க எழிலுடன், முகுந்தனை நோக்கி, “கொண்டன் நிகர் குழலான் உன் மகன் மீது ஆசை கொண்டனன் யாண். மணம்புரியக் கொடுப்பாய்” என்றான். உதிக்கும் இளம் பரிதியென முன்வந்தானை, முகுந்தன் உவந்து நோக்கி “மங்கள நாதனே நம் பிரார்த்தனைக்கேற்ப வந்தனரோ,” எனப்பூரித்து, உபசரித்து வணங்கி அரியவோர் ஆசனத்திலிருக்கச் செய்து அர்க்ய பாத்தியம் அளித்து, “உம் வரவு எம்மனோர் தவம்” எனப் போற்றினான். விமலையும், மைந்தர் மரபினர்கள் மற்றும் சுற்றத்தார்கள் எல்லாம் வந்தவனை யடுத்து நோக்கி, ‘நம் தேவி மங்களப் பேரினாட்க்கு இவனே தகும், தகும்” என முழங்கினர். தேவியும் இவை யெலாங்கண்டு மெய் சிலிர்த்திருந்தாள். வந்த குமரன் முகுந்தனை நோக்கி “விரைவிலே உமது குமரிக்கு திருமண நாளைக் குறியும்” எனக் கூறி மறைந்தார்.

தேவி திருக்கல்யாண வைபவம்

(1) இம்மங்களச் செய்தியைச் சிரமேற்றாங்கி, முகுந்த மாமறையோன் மன்னன் ஸேதுமதியனை யடைந்து நடந்ததை உரைக்க, மன்னன் மட்டில்லா மகிழ்ச்சி திளய் “மங்களநாதன் கருணைதான் என்னே” எனப் புகழ்ந்து “மறையவரே! முகூர்த்த நன்னாள் பாரும்” எனப் பகர்ந்தனன். முகுந்தனும் ‘சீர் பெருகு மேட மாதம் சிறந்த பூரணையோடஸ்தம்’ சிறந்ததென, மன்னன் இசைந்து மணவோலை எங்கும் அனுப்பினன்.

(2) முகுந்தனும் முன்னோர் முறைப்படி சாஸ்தாவாதி தெய்வப் பிரார்த்தனைகள் அனைத்தும் செய்து, சீர் பெருகும் சுமுகனைப் போற்றி, சிறந்தவன் தாளில் மலர்சார்த்தி, பேர் பெருகும் நாட்கால் நாட்டி, தேவரும் புகழதக்க மணப்பந்தல் அமைத்தான் மறையவரும் மற்றவரும் பக்தி பக்தியாய் வந்து அமர்ந்தனர். மங்களநாதன் மணக்கோலங்காண தேவரெல்லாம் பாரினர் போல் வந்தனர். வந்தவர் அனைவரையும் மன்னனும் முகுந்தனும் முறைப்படி உபசரித்து அவரவர் இருக்கைகளில் அமரச்செய்தனர். வாத்திய கோஷங்களார்ப்ப, வானில் வரிசை எக்காளங் கொம்பு முட்ட, மங்கள சோபனங்கள் முழங்க, நடமாதர் பரதம் பிடிக்க, மங்கையர் பாலிகை கூட்ட, மறையவர் வேள்வித் தீ அமைத்து மந்திர கீதங்கள் முழங்கினர்.

(3) மணமகளாம் மங்களப் பேரினாளை, கதவி நீராட மாதரெல்லாம் வைகைப் பெருந்துறையை நாடி பவனியாக வந்தனர். மங்கள நாயகி, மறையவர் வேத மோத, கந்தருவர் கீதம் பாட இன்னிசை ஒலிக்க, தேவகன்னியர்கள் போற்ற, தன் சகிகளுடன், “கங்கை காவிரி பொருணை, சிந்து காளிந்திநதி சந்த்ர பாகை, யமுனை ஸரஸ்வதி, தெய்வ நதி பம்பை திரைவாய் கொண்டிரையு மங்கையச்சுதை தாம்ப்ரபரணி, வெண்கோமதிப்ரயாகை பொங்கி, குங்குமங் கோட்ட மிலவங்க மேலத்தினொடு குழுமிச்சுலவ, வண்டிரை மலர்த்தாலும், வெண்சங்கமும் தாமரை முத்தும், வருணன் குலத் தேவி மார்பணியும் மஞ்சளையும் அள்ளியள்ளி, வெண்டிரை கொழித்தெறியும் வையைப் பெருந்துறையில் வெள்ள நீராடி யருளினான். இங்ஙனம் உலகெலாம் புகழ மங்கள் நீராடி, வாரி முடித்து அலங்கரித்து, மங்கையரும் மாதவரும் மகிடமா மத்தனியாள் மகிமை பாட, மங்களநாயகி மயிலான், எழிலுறப் பொற் சிவிகையிலமர்ந்து கதலி நீர்ப்பவனி வந்தாள். மன்னன் ஸேதுபதி முகுந்தனாதியோரும் இத்திருக்கோலல் கண் குளிரக கண்டு, சடங்குகள் முற்றும் செய்து சதிருடன் அணங்கை வாழ்த்தி, மதகயமுகனை, வேளை, மங்களேச்வரனைப் போற்றி, எவர்களும் புகழ, தேவியை நவமணி ஊஞ்சல் மீது நலமுற அமரச் செய்து இறையவன் வருகையை எதிர் நோக்கி நின்றனர்.

(4) மணமகன் மங்களேசன் முன் தோன்றிய குமரன் வடிவிலே, குபேரன் முதலிய தேவகணங்கள் மானிட வடிவிலே சூழ வர, வேதமுறைச் சடங்கெல்லாம் விதிமுறை வழுவாது செய்து ஸமாவர்த்தனத்துக் குரியவனாய் எழுந்தருளினார் முகுந்தனாதியோர், விரைந்தெதிர் கொண்டு வணங்கி வேதமந்திரங்கள் ஓதி

“வாரீர் வாசிரேஷ்டரே, எமது கன்னிகையாம் மங்களேச்வரியை கன்னிகாப்ரதானம் செய்து தருகிறேன் காசியாத்திரையை திருவுளம் பற்றாது உத்வாக மண்டபத்துக்கெழுந்தருளுவீர், எனப் பிரார்த்தித்தனர். இறைவன் மனமிசைந்து, தம் பக்கலில் நின்ற குபேரன் தாங்கி நின்ற சோபனத் ரவ்யமாம் பொற்கிழியைப் பெற்று, முகுந்தனை நோக்கி “மறையவரே! இது கன்யா சுல்கம் இலக்ஷம்கட்டி வராகன்” என முகுந்தனிடம் கொடுக்க, கெட்டி வாத்தியங்கள் முழங்கின. முகுந்தனாதியோர் இம்மாபெரும் “வரிசை” பணிவுடன் ஏற்க, மங்களநாதன் தம் குழுவோடு நான்மறை முழங்க, மங்கள் கீதம் ஒலிக்க மணப்பந்தலுக் கெழுந்தருளினார்.

(5) விமலையாதி தேவியர்கள் மணமகனை வரவேற்று ஹாரத்தி செய்து, திவ்ய மலரடிகளுக்குப் பாதபூஜை செய்து, அழைத்துச் சென்று, தேவியோடு நவமணி ஊஞ்சலில் அமரச் செய்தனர். இறைவனும் இறைவியும் ஊஞ்சலில் அமர்ந்த கோலம் சொல்லும் தாமன்று, கண்கள் படைத்த பலன் அன்றே கிடைத்ததென அனைவரும் இமையாது தம்பதிகளைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்தினர். மறையவரும் மங்கையரும் ஊஞ்சல் கீதம் பாடி, பின் மணமகளையும் மணமகனையும் நவமணிப் பாயில் எதிரெதிராய் இருக்கச் செய்து நலங்கு செய்வித்தனர்.

(6) இந்நலங்குக் காட்சியைக் கண்டு மகிழ அமரரெல்லாம் விரைந்தனர். இந்திராணியும், திருவாணியும் இசைந்தமடமாதர்கள் போல் சந்திரன் ஒளியென விளங்க சதிகளுடன் கூடிவந்தனர். நந்திமுகன் ஷண்முகனும் தையல் வள்ளி குஞ்சரியும் பக்தியொடும் வீரருடன் பாரினர் போல் வந்திருந்தார். நாற்றிசையும் தானெருங்க நந்தியொருவேதியன் போல் யாவரையும் பார்த்திருத்தி பார் புகழக் காத்திருந்தான். மங்களேச்வரியாள் மங்களநாதன் கழல்களைப் போற்றி, சந்தனத்தைப் பூசி, சதிருடன் மாமலர் சூடி அந்த மிகுங்குமரனை அலங்கரித்தாள் விருப்பமுடன் நலங்கு மஞ்சள், விதவிதமாய்த் தாளிவிட்டு, பருப்பும் உப்பும் அப்பளமும் பரிவுடனே சுற்றிவிட்டாள். அன்பர் தொழும் நாயகனை அடி மலரில் தண்டனிட்டு ஆதரவாய் நலங்கு செய்ய இறைவன் எதிரே இனிதமர்ந்தாள். மங்களநாதன் மகிழ்ந்து மாதரசிக்கு நலங்கு செய்தார். நாளிகேரம் தானுளவ நலமிகவே விளையாடி, தொண்டரெல்லாம் புகழ, செண்டெடுத்துச் செங்கையினால் சேர்ந்தெரிந்து விளையாடி, தோழின் மறுமலர் சார்த்தி தோகையர்கள் வியந்திட இறைவனும் இறைவியும் திருவிளையாடல் செய்தனர்.

(7) பின் தெய்வத்தம்பதிகளை மறையோர், மண வடை மீதிருத்தி கன்னியர்கள் வியந்து சூழ, பணிலமாமுழவாதி பதினெண் வாத்தியம் முழங்க பக்தியாய் மறையோர் மாதர் அவரவரிருக்கையில் அமர்ந்தனர். மந்திரிதலைவராதி மன்னர் மற்றொவரும் நெருங்கியார்த்தார். நந்தி ஓர் மறையோனென்ன ஈடுவுற்று விளங்கி நின்றார்.

முகுந்தன் முந்தக் கருணையானை, யானை முகன் தன்னை ஏத்தி, சிந்தையில் மங்களேசன் சீரடிப் போற்றி, அந்தமில்லா நிதிகள் அனைவர்க்கும் வழங்கி, அந்தணர் அனுமதி பெற்று மறை முழங்கி மருவு மனைவியொடு மதுவர்க்க பூஜை செய்ய, பருவமுடன் ஹோமம் பயன்தர வளர்ந்தோங்க, உபய கோத்திரம் சொல்லி மங்களப்பேரினான் திருக்கரங்கள் தன்னை மங்களநாதன் அருட்கரங்களில் பொன்னும் பூவும் நீரும் சொரிந்து கன்னிகாப்ரதானம் செய்ய இறைவன் மங்கள நாயகியைக் கரம் பற்றினான். முறைப்படி மாங்கல்ய பூஜை செய்து தேவரும் போற்றும் திருமாங்கலியப் பெருங்கூழையை (தாலிப் பாயசம்) நிவேதனம் செய்து யாவரும் அத்திருமாங்கல்யத்தைத் தொட்டும் கண்ணில் ஒற்றிப் போற்ற, மங்களநாதன் திருக்கரத்தேந்தி மங்கள நாயகியின் திருக்கழுத்திலே திருமாங்கல்யதாரணம் செய்தார். தேவதுந்துபி முழங்க மலர்மாரி போழிந்தது. மன்னன் ஸேதுமகிபன் முகுந்தனாதியோ ரெல்லாம் வணங்கித் துதித்துப் போற்றினர். இறைவன் தேவி திருத்தாள் பற்றி விதிப்படி ஸப்தபதி இயற்றி, அம்மி மிதிக்கச் செய்து, தீவலஞ்செய்து, பொரி முகந்தட்டி, இங்ஙனம் சீர் பெறு மேடமாதம் சிறந்த பூசனையோடத்தமாம் ஏர் பெறு முகூர்த்தம் தன்னில், மங்களப் பேரினானை மகிமையாய் விவாகம் செய்தார்.

(8) பார் புகழ சுகந்தம் பன்னீர் பழக்குலையடைக்காய் யாவும், ஏர் மறையவர்களாதியெவர்க்கும் மாமுகுந்தன் நல்கினான். அந்தனமடவராதி அவையில் மற்றொவர்க்கும் அன்பாய் சிந்தைக் கண்களிக்க தானமும் சிறப்பு மீந்து, விந்தையாய் பூரியார்க்கும் விளங்கிட வழங்கினர். மின்னனையார் சோபன கீதம் பாடி, அந்தமாம் ஹராத்தி சுற்றி தம்பதிகளைப் போற்றினர். இறைவனுடன் வந்த இமையவர்யாவரும், முன்னம் பார்வதி கல்யாணக் காட்சியைக் கண்ட பின் இத் திருக் கல்யாணமே மிகச் சிறந்ததெனமன்னனையும் முகுந்தனையும் வாழ்த்தி மறைந்தனர்.

(9) முகுந்தமா மறையோன் மாப்பிள்ளையாய் எழுந்தருளியிருக்கும் மங்களேசப் பெருமானைத் தொழுது “நாதனே! ஸம்பந்தத்தார் கலம் பெற உண்ட பின் ஏனையோர் உண்ணன் கொள்கை”, என, இறைவன் தம் கணங்களின் தலைவனை நினைந்தான். அவனும் உடனே மானுடவடிவில் தோன்றி இறைவனைத் தொழுது நின்றான். மங்களநாதன் முகுந்தனுக்கு அவனைக்காட்டி, “மாதவரே! மறையவரே! இவன் எம்மனோன். இவனே ஸம்பந்திகளின் பிரதிநிதி. இவனுண்டபின் முனிவருண்பர்” என மொழிந்தனர். முகுந்தன் அன்னவனை உபசரித்து

அமுதுபடைத்தனர். பாயசம் பச்சடி தே பாகவியல், துவரன் தூய அன்னம், பருப்பு துவட்டல், கிச்சடி, ஒலன், நேய நெய்யோடு எரிசேரி, காயரஸம், ஸாம்பார், கறியமுதும் பரிமாறி, உப்பேறிகள், பொடிகள், உப்பிவிட்டவைகள், அப்பளம்பேணி, போளி அதிரசம், வடை மோதகங்கள், முப்பழங்கள், சுகியன் முறுக்கு, ஆமவடை தப்பாமல் தரந்தரமாய்ப் பரப்பினான். வத்தல் வடாங்கள், வர்க்க அன்னங்கள் மிக்க அத்தனையும் இட்டு உபசரித்தான். அத்தலைவன், அவையத்தனையும் நொடியில் அருணந்தி, சமைத்த அரிசிகலம் இருபதும் அவைக்கிசைந்தவையெல்லாம் சரிவர உண்ட பின்பு, அன்னம் கொஞ்சமிருக்க "இன்னம் கொடுவாருங்கள், என்னே ஆச்சரியம்" என முழங்கினான். மாதர்களும் மறையவரும் "ஈதென்ன ஆச்சரியமென வியந்து" 1) பழம் புலியைக் கரைத்து படர்வெடிவழஞ் செய்தார். சிலர் தயிரைச் சிறந்த உப்புச் சாறாக்கி, தெவிட்டும் மூலிகையாம் சிறந்த அப்பக் கொடியைப் பொரித்துத் தூவி, துலங்கு கீரை சமைத்து, அவைகளைக் கலத்திவிட்டனர். கணத்தலைவன் திருப்தியுற்றான். மறையவரையும் மன்னனையும் மகிழ்ச்சியுடன் நோக்கி "மாதவ ஸம்பந்தத்தாம் மருங்குளோன் ஒருவன் வந்தேன். ஆதரவுப்புச்சாறும் கீரையும் அருந்தச் செய்தீர்! பூதலத்தில் இதுபோல் புதுமையில்லை, இனியாவர்க்கும் உண்டி கொடுத்திடுக" என்றான். மன்னனும் முகுந்தனும் இனி ஒன்றுமில்லாததைக் கண்டு மயங்கி நின்றனர். தலைவன் "மயங்காதீர், இது மங்களநாதன் விளையாடவே, சமைத்தவையாவும் முன்போல் ஒரு பங்கு கூடுமென மொழிந்து மறைந்தனன். அங்ஙனமே ஆக, முந்த வேதியர்கள், மாதர் முறை விரும்பியுண்ண, அந்தமா முகுந்தன் எல்லா ஆச்ரம வர்ணத்தாரை விதம் விதம் புசிக்கச் செய்தான். சந்தன தாம்பூலங்கள் சகவர்க்கும் நல்கினான்.

(10) அன்று மாலைப் பொழுதும் வந்து. ஹோம ஔபாஸனாதிகளை மங்களநாதனும் தேவியும் முறைப்படி முடித்தனர். இரவில் எல்லோரும் துயிலில் மூழ்கினர். நடுநிசி ஆகியது. எம்பிரான் மங்களநாயகியை அழைத்து, "நாம் வந்த காரியம் முடிந்தது இனி நம் இருக்கை செல்வோம்" என, தேவியும் இசைய, ஒருவரும் அறியாதே தம் பொற்றேரில் ஆரோகணித்து, திருவுத்தர கோச மங்கை நோக்கிச் சென்றனர். வழியில் நின்ற புளி, "இறைவ! இங்ஙனம் ஏகுதல் நன்றோ" வென, இறைவன் தேரை நிறுத்தி 'நீ இனி இரவு பகல் துயிலாது எமைத் துதித்து நிற்பாய்" என்றருளி மேலும் சென்றனர். தீயணூர்த் தலம் வருகையில் லருணோதயமாகவே, ஆங்கு தேரை நிறுத்தி முறைப்படி ஔபாஸனாதிகளைச் செய்து கொண்டிருந்தனர்.

விடிந்ததும் மன்னனும் முகுந்தனும் மண மக்களைக் காணாது மயங்கி, தேர்த்தடங்கண்டு வழியில் அவ்வுறங்காப் புளியின் உரை கேட்டு தீயணூர்த் தவத்தில் தம்பதிகளைக் கண்டு மன அமைதி கொண்டு இறைவனை இறைஞ்சி நின்றனர். மங்களநாதன், "அந்தணரே! நீர் மனைவியோடு நித்தமும் எமை நினைந்து நிகரிலாத் தவங்கள் செய்தீர். சுத்த நம் அருளால் கௌரி சுதையென நின்பால் வந்தாள். அன்னவள்

மகிழ நாம் வந்து அரியமாமணம் புரிந்தோம். உம்மது மனைவி மைந்தர் உறவினர் மறையோர் யாரும் நாளும் நன்னயம் பெருக வாழ்ந்து நயந்து வீடடைவீர்", என்றார். முகுந்தமறையோன் "உடையவா! உமையோர் பாகா! உவமை இலதாய்! கங்கைச் சடையவா! விவாகம் முற்றும் சார்ந்த நாள் ஐயதாகும். தடையறப் பூர்த்தி செய்து உமது கணங்களோடும் அமுது செய்தருளீர்," எனப் பாவினன்.

இறைவனும் உளங்கனிந்து, இதற்குத் தென்பால் அடுத்து யோசனை நாலுள்ள மாதலமாம் திருவுத்தரகோசமங்கையில் எம் ஆலயத்தில் உன் விருப்பம் நிறைவேறும் என எழுந்தான்.

(11) இறைவன் அருளியது கேட்ட ஸேதுமன்னன் உத்தர கோச மங்கைக்குக் கடிது ஏகி இறைவன் ஆலயமெங்கும் புதுக்கி, எழில் மணக் கோயில் செய்து பொங்குமாக் காவணங்கள், போஜன சாலையாதி, அங்கமாம் எல்லாம் செய்தான். இறைவன் தன் பொற்றோரையும் தம் ஊன்று கோலையும் கல்லுருவாக்கி, தேர்ச்சக்கரங்களில் ஒன்றை அக்கினி தீர்த்தத்தில் மறையச் செய்து, எஞ்சிய விவாஹ நால் நான்கையும் முறையோடக்கச் செய்தான்.

"பூதக்கலம்"

(1) ஐந்தாம் நாள், முகுந்தன் வேதியர்க்கு மறை முறை யாவும் நல்கி, பூடிசந்தனம், மிகு தாம்பூலம் சதிருடல் ஆரம் நல்கி அந்தண மடவார்கெல்லம் ஆடை பொன்மணிகளீந்து, வந்தவர் எவர்களும் மிக்க வரிசைகள் தாம் போல் செய்தார். தொண்டெருக் கெளிய னென்றே தொல்லுலகறிய, முன்னாள் அண்டருக்கமும் ஈந்தோன், அரிவையோடு ஹோமம் செய்து முகுந்தனை நோக்கி, "ப்ண்டென உப்புச் சாறும் பழம்புளிக் கீரையோடு மண்டெலத் தேவர்க்கும் கொடுப்பாய்" என்றருளினன். முகுந்தன் மனங்களித்து, அன்னமும் அதற்கு வேண்டும். அறுசுவை எவையும் செய்து நன்னய மிகுந்த மூன்றும் னருளால் ஆக்கி, இன்னமும் அனேக வர்க்கம் செய்து இறைவனை அணுகி இறைஞ்சி நின்றான்.

(2) இறையவன் மனங்கசிந்து, மங்கள மயிலாளோடும், உத்தம பூதரோடும் உண்டிக் கெழுந்தனன். முகுந்தன் அகமிக மகிழ்ந்து அனைவரையும் உபசரித்து, பாதமலர்களைத் தூய நீராட்டி அப்பாத்தீர்த்தத்தை சிரசில் தெளித்து அருணந்தி, தூப தீபங்கள் காட்டி கதம்ப மலர்கள் சூட்டி பக்தியில் ஆரணங்கள் பரப்பி அனைவரையும் அதிலிருத்தி களப சந்தனங்கள் பூசி கருணை மாதவர் எனப் போற்றி விரும்பி புண்டருளுங்ளெனப் பிரார்த்தித்தான். அனைவரும் நலம் நலமெனப் புகழ்ந்து புசித்தனர். பூசுரர் போல் வந்த பூத கணங்கள், பூதக்கலமீதே எனப் புகழ்ந்து முன்னமுபுச்சாறுகீரை முது வெடிபழம் உண்ண, இது ஆச்சரியம் ஆச்சரியம் என முழங்கி மகிழ்ந்து அருந்தினர். தங்கம் வெள்ளிக்கலங்கள் தாந்தரமாய்ப் பரப்பி,

மங்கையர்கள் பாயாசம் பால் நெய் தேன் இவை பகிர்ந்து அவற்றில் நிறைப்ப, ஸம்பந்திக் கலமிதுவே என மகிழ்ந்தருந்தினர். நிறைபுகழ் ஸேதுமன்னன் மற்றோர் எவரும் உண்டார்.

இறைவன் ரிஷபாரூடராகக் காக்ஷியளித்தல்

(1) இவ்வனம் நாதன் நயமுறக் கல்யாணத்தை புகழுற நடாத்தித் தந்து, அனைவரும் வியந்து போற்ற பெருங்கருணை கூர்ந்து ரிஷபாரூடராய் அனைவர்க்கும் காட்சி தந்தான். மன்னனும் முகுந்தனாதி மற்றெவருங் கண்டு 'உள்ள மெய்யுருகிப்" போற்றித் துதித்தனர். இறைவன் அருளுவார்:- "முகுந்த மாமறையோய்! பாரெங்கும் புகழ நீங்கள் தேவியை உங்கள் மகவாயும் நம்மை உங்கள் மருகனாயும், என்றும் போற்றி வாழ்வீராக".

"ஸேதுபதியே! முந்த நம் ஸேது ஸ்நானம் முடிந்த பின்னர் எவரும் வந்து, உந்தனைக் கொலுவிற் காண்போர் உளந்தனில் நினைந்து தெய்தி, எந்த மதடியாராவர். ஸந்ததம் நீ ஈடேற சதுர் மறை வழுவா தோங்க, முகுந்தமாமறையோனோடு இத்தலம் புகழ் பெற்றோங்க, நம் திருக் கல்யாணத்தை ஒவ்வொரு ஆண்டும் சித்திரை அத்தநாளில் சிறப்புறச் செய்து நீவிர் முறை முறை வாழ்ந்திருங்கள்."

இங்ஙனம் அருளி மங்கள நாத மங்களநாயகியோடும் திருக்கோயிலுள் மறைந்தனர். மன்னனும் மறையவனும் மற்றுமுள்ளோரும் மெல்லாம் "ஹர ஹர சம்போ போற்றி, மங்களநாதா போற்றி மங்களேச்வரியே போற்றி" எனக்கசிந்து கண்ணீர் மல்கி மெய்ப்பொருள் கண்டோமென்று மெய்மறந்திருந்தாரன்றே.

சுபம்.

அனுபந்தம்

ஸ்ரீ மஹிஷாஸுர மர்த்தினி ஸ்தோத்திரம்.

(மகிட மா மத்தனியாள் மந்திரம்.)

1. அயிகிரி நந்தினி நந்தித மேதினி, விச்வ வினோதினி நந்தனுதே,
கிரிவச விந்திய சிரோதி நிவாஸினி, விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுதுதே,
பகவதிஹே சிதிகண்டகுடும்பினி பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

2. ஸுரவர வர்ஷிணி துர்தா தர்ஷிணி துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே,
த்ரிபுவன போஷிணி சங்கரதோஷிணிகில்பிஷமோஹிணிகோஷரதே,

தநுஜநிரோஷிணி திதிஸுதரோஷிணி, துர்மத சோஷிணி ஹிந்து ஸுதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

3. அயி ஜ கதம்ப மதம்ப கதம்பவ நப்ரிய வாஸினி ஹரஸரதே,
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய, ச்ருங்க நிஜாலய மத்ய கதே
மது மதுரே மது கைடப கந்ஜினி, கைடப பந்ஜினி ராஸரதே
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

4. அயி சதகண்ட விகண்டித குண்ட, விதுண்டித கண்ட கஜாதிபதே,
ரிபுகஜகண்ட விதாரண சண்ட பராக்ரம கண்ட ம்ருகாதி பதே,
நிஜ புஜ தண்ட நிபாதித கண்ட, விபாதித முண்ட படாதிபதே
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

5. அயி ரணதுர்மத சத்ருவதோதித துர்த நிர்ஜா சக்திப்ருதே,
சதுரவிசார துரீண மஹாசிவ தூத க்ருத ப்ரமதாதிபதே,
துரித துரீஹ துராசய துர்மதி, தானவதூதக்ரு தாந்தமதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

6. அயி சரணாகத வைரிவ தூவர, வீரவரசபயதாய கரே
திரிபுவன மஸ்தக சூல விரோதி, சிரோதி க்ரு தாமல சூலகரே,
துமி துமி தாமர துந்துபி நாத மஹோமுகரீ க்ருத திக்மகரே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

7. அயி நிஜ ஹும் க்ருதி மாத்ர நிராக்ருத, தும்ர விவோசக தூம்ர சதே,
ஸமர விசோஷித சோணித பீஜ ஸமுத்பவ சோணித பீஜலதே,
சிவ சிவசும்ப நிசும்ப மஹா ஹவ, தர்பிதபூத பிசா சரதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

8. தணூனு ஸங்க ரண க்ஷண ஸங்க பரீஸ்தரதங்க நடத்கடகே,
கனகபி சங்க ப்ருஷத்கநி ஷங்க ரஸத்பட ச்ருங்க ஹதாவடுகே,
கிருத சதுரங்க பலக்ஷிதாங்க கடத்பஹுரங்க சடத்படுகே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

9. ஜய ஜய ஜப்ய ஜயே ஜயசப்த பரஸ்துதி தத்பர விச்வநுதே,
பண பண பிஞ்சிமி பிங்க்ருத நூபுர ஸிஞ்சித மோஹித பூதயதே,
நடித நடார்த நடீ, நட நாயக, நாடித நாட்ய ஸுகானரதே
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

10. அயி ஸுமன: ஸுமன: ஸுமன: ஸுமந: ஸுமனோ ஹர காந்தியுதே,
ச்ரித ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீகர வக்த்ரவ்ருதே,
ஸுநயன விப்ரமரப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரம ராதிபதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

11. ஸஹித மஹா ஹவ மல்லம தல்லிக மல்வித ரல்லக மல்லரதே,
விரசித வல்விக பல்விக மல்லிக பில்விக பில்விக வர்கவ்ருதே,

ஸித க்ருத புல்ல ஸமுல்லஸி தாருண, தல்லஹ பல்லவ ஸல்லவிதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

12. அவிரல கண்ட கலந்மத மேதுர, மத்தமதங்கஜ ராஜபதே,
த்ரிபுவன பூஷண பூத கலா நிதி, ரூப பயோ நிதி ராஜ ஸுதே,
அயி ஸுத தீஜன லாலஸ மானஸ, மோஹன மந்மத ராஹ ஸுதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

13. கமல தலாமல கோமல காந்தி, கலாகவிதாமல பால லதே,
ஸகல விலாஸ கலா நிலயக் ரமகேலி சலத் கல ஹம்ஸகுலே,
அவிகுல ஸங்குல குவலய மண்டல மௌலி மிலத் பஹுளாலிகுலே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

14. கரமுரளீரவ வீஜித கூஜிக வஜ்ஜித கோகில ம்ஞ்சுமதே,
மிலித புலிந்த மனோ ஹர குஞ்சித ரஞ்சித சைல நிகுஞ்ச கதே,
நிஜ குண பூத மஹாசபரீ கண, ஸத்குண ஸம்ப்ருத கேலிதலே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

15. கடி தட பீத துகூல விசித்ரம யூக திரஸ்கிருத சந்த்ர ருசே,
ப்ரணத ஸுராஸுர மௌலி மணி ஸ்புர தம்சுல ஸந்நத சந்த்ர ருசே,
ஜிதக நிகாசல மௌலிப தோர்ஜித, நிர்பரகுஞ்சர கும்பகுசே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

16. விஜித ஸஹ ஸ்ரக ரைக, ஸஹஸ்ரக, ரைகஸஹ ஸ்ரக, ரைக ணுதே,
க்ருத ஸுர தாரக ஸங்கர தாரக ஸங்கர தாரக ஸூனு ஸுதே,
ஸுரத ஸமாதி ஸமாந ஸமாதி ஸமாதி ஸமாதி ஸுஜாதரதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

17. பத கமலம் கருணாநிலயே, வரிவஸ்யதி யோனு தினம் ஸசிவே,
அயிகமலே கமலா நிலயே கமலா நிலய ஸ, கதம் நபவேத்
தவபதமேவ பரம்பதமித்யநு சீலயதோ மம கிம் நசிவே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

18. கனகலஸத் கல ஸிந்து ஜலைரநு, ஸிஞ்சினுதே ருண ரங்க புலம்,
பஜதி ஸகிம் ச சசீ குச கும்ப தடீ பரி ரம்ப ஸுகாநுபவம்,
தவ சரணம் சரணம் கரவாணி, நதாமா வாணி நிவாஸிசிவம்,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

19. தவ விமலேந்து குலம் வத நேந்துமலம் ஸகலம் நநு கூலயதே,
கிமு புரு ஹூத புரிந்து முகீ ஸுமுகீ பிரஸௌ விமுகீ க்ரியதே,
மமது மதம் சிவ நாம தநே பவதி க்ருபயா கிமுத க்ரியதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

20. அயி மயி தீன ஜயானு ஜயா க்ருபயைவ த்வயா பவித ஸ்யமுமே,
அயி ஜக தோ ஜநநீ க்ருபயாஸி யதாஸிததா நுமி தாஸி ரதே,
யது சித மத்ர பவத்யுரரீ குருதா துரு தாப மபாகுருதே,
ஜயஜய ஹே மஹிஷா ஸுரமர்த்தினி ரம்யக பர்த்தினி சைலஸுதே.

தேவியும், ஸ்வாமியும் ஊஞ்சலில் எழுந்தருளி யிருக்கும் ஸமயம் போகலூர் மஹா ஜெனங்கள் கானம் செய்யும்

-ஊஞ்சல்-

1. சீராரும் நால்வேதக் கால்கள் நாட்டி,
சிறந் வைடூரியத்தால் விட்டம் பூட்டி
நேராக ஐந்தெழுத்தை பலகை சேர்த்து
நித்திய தத்துவமே நெடுங் கொங்கையாக
கார்மேக மாலயனும் கயறதாக
கமல ஸரஸ்வதியும் லக்ஷிமியும் வடந்தொட்டாட்ட
வா ரேறு பூண் முலையாள் ஆடி ரூஞ்சல்
மங்கை மங்களேஸ்வரியாளா டிரூஞ்சல்.

2. நாற்றிசையோர் கொண்டாட புகலூர் வேந்தன்
நற்குழவி தனக்காக நடந்து சென்று
தீர்த்தமதில் மூழ்கி வந்து செம்பொன் வாசல்
திருக் கொடியின் மரத்தடியிற் சென்று கேட்க
போற்றுதற்கு வந்த மங்கை புத்திரியான
பொன்னேறு பூண் முலையாள் ஆடிரூஞ்சல்
புகலூர் வளர் நாயகியே ஆடிரூஞ்சல்

குறிப்பு:- இது போகலூர் சப்ரிஜஸ்டிரர் ஸ்ரீ ராமசுவாமி அய்யர் அவர்கள் முன்னோர்கள் பரம்பரையாய் பாடி வருவது.

மேல அரவன் குளம் (ஜடாயு தீர்த்தம்) ஸ்ரீ ஸோம நாத பாரதி அவர்கள் இயற்றிய ஊஞ்சல்.

1. ஆனை முகத் தைல் கரணி னடியை வாழ்த்தி
அனுதினமும் ஊஞ்சல் சொல்வோரவனி மீதில்
மாலையிடத் தணியு மெந்தை மங்களேசன்
மலரடியை சிந்தை செய்தே மகிழ்ந்து வாழ்க.

2. சீராருங் கதிர் வைரக் கால்கள் நாட்டி
சிறந்த வைடூரியத்தால் வளைகள் மாட்டி
பாராரும் புகழ் பவழப் பலகை கூட்டி
பண்புடைய பகர் கனகக் கயிறு பூட்டி
வனிதையரா விருபுறமும் வடங்களாட்ட
வந்து மட மாதர் சிலர் வணகிப் பாட
தனியருளான் மங்கள நாயகனைக் கூடி
தழைக்கு மங்களேசுவரி யாளாடி ரூஞ்சல்.

3. வழங்கு மங்களேசனையே வணங்கி வாழ்த்தி
வையக மெலாம் புகழ வாழ்ந்து நாளும்
முழங்கு திரி சுதந்திரத்தார் முகுந்தன் மாது
முறை முறையாய் மூவா னோடாடிரூஞ்சல்.

4. மங்களஞ்சேர் மாதர் பலர் மகிழ்ந்து நாட
மன முருகிக் கட்டியங்கள் மதிக்கப் போட
மங்கள நாயக மறையோன் முருங்கு கூடி
மங்கள நாயகி மயிலா ளாடிரூஞ்சல்.

5. விண்ண வரு மாலயனு விரும்பிச் சூழ
விளங்கு மறை முதலெவரும் வியந்து போற்ற
எண்ணரிய மங்கள நாயகனைக் கூடி
எங்கள் மங்க ளேஸ்வரியா ளாடிரூஞ்சல்.

-நலங்கு-

1. எங்கள் மங்களேச்வரிக்கு மெதிரிலவள் கணவனுக்கும்
மங்களமாம் நலங்கு செய்ய மகிழு வினாயகர் துணையே.
மங்கள நாதன் மகிழ்ந்து மாதரசை மணம் புரிய
அங்கவனினாடல் கண்டே யமா ரெல்லாம் வருதலுற்றார்.
மாலயனு மகபதியு மற்று முள்ள தேவருடன்
சால வரு மானிடர் போல் சகலுருமுன் வந்திருந்தார்.

2. இந்திராணி திருவாணி இசைந்து மட மாதர்கள் போல்

சந்த்ர னொலி யென விளங்க சகிகளுடன் கூடிவந்தார்.
தந்தி முகன் ஷண்முகனும் தையல் வள்ளி குஞ்சரியும்
பந்தியொடும் வீரருடன் பாரினர் போல் வந்திருந்தார்.

3. மாதரெல்லாம் மனமகிழ மணவரையைச் சூழ்ந்து நின்று
ஆதரவாய் நலங்கு செய்ய ஆவலுடன் பாடலுற்றார்.
நாற்றிசையுந் தானெருங்க நந்தியொரு வேதியன் போல்
பார்த்திருத்தி யாவரையும் பார்புகழக் காத்திருந்தாள்.

4. எங்கள் குல தேவியெனு மெதிரில் மங்களேசுவரியாள்
மங்கள நாதன் கழலார் மலரடியில் போற்றி செய்து
சந்தனத்தைத் தான் பூசி சதிருடன் மா மலர் சூடி
அந்த முகுங்கணவனென் போனக மகிழ அலங்கரித்து,
சந்தனத்தைத் தான் பூசி சதிருடன் மாமலர் சூடி
அந்த மிகுல் கணவ னென் போனக மகிழ அலங்கரித்து,
விருப்ப மொடுநலங்கு மஞ்சள் விதவிதமாய்த் தாளிவிட்டு,
பருப்பு முப்பு மப்பளமும் பரிவுடனே கற்றியிட்டாள்.

5. அன்பர் தொழும் நாயகனை அடியினையில் தண்ட விட்டு
இன்பமிகு மாவலுடன் ஈசுவரியாளெ திரி ருந்தாள்.
கங்கை மதி சூடுகின்ற கருணைமிகு கணவனென் போன்
நங்கையர்கள் புகழ்ந்திடவே நாயகிக்கு நலங்கு செய்தார்.

6. நாளி கே ரந்தாணுவை நலமிகவே விளையாடி
தோளின் மறு மலர் சொரிவார், தோகையர்கள் வியந்திடவே.
செண்டெடுத்துச் செங்கையினால் சேர்ந்தெரிந்து விளையாடி
தொண்ட ரெல்லாம் புகழ்ந்திடவே தோற்றமிக நலங்கு செய்தார்.

திருக்கல்யாண முகூர்த்தமான பின் ஹாரதி செய்யும் போது பாட வேண்டிய

சோபனம்

1. சோபனமே சோபனமே சொல்லுகின்றேன் யாவருக்கும்,
தாபமெல்லாம் நீக்குமெங்கள் தந்திமுகன் காப்பாமே.

2. வையகமெலாம் புகழும் வனச மலர் மீதுதித்த
தையல் மங்களே ச்வரியாள் தாள் களுக்குச் சோபனமே.

3. அந்தி பகலுங்குகளை ஆதரவாய் போற்றுகின்ற
செந்திவிரண்டாயிரத்தோர், செல்வியற்குச் சோபனமே.

4. முதிய மறையவன் தூய முகுந்தன் மகள் கைப்பிடித்து
துதிபெருகு நாதனிரு துணையடிக்குச் சோபனமே.

5. முச்சுதந்திரத் துதித்த முகுந்தனுக்கு மா மகளாய்
மெச்சு மங்களேச்வரியா மெல்லியச்குச் சோபனமே.

6. மங்கள நாதற் கிசைந்த மாது மங்களேச்வரியாள்
எங்கள் குலத்தரசியராம் ஏந்திழைக்குச் சோபனமே.

7. எங்கள் மங்களேச்வரியாள் எழில்பெறுகு மா மணத்தின்
மங்களத்தைப் பாடுகின்ற மாதர்க்கெல்லாம் சோபனமே.

மங்கள நாயகி துதி

(மகிஷாஸுரமர்த்தனி – சந்தம்)

1. அக்ஷர ரூபிணி, அம்பிகை மோஹினி,
அன்பர் மனத்தமர் அன்னை நீயே,
அகிலாண்டேச்வரி ஆயிக்ருபாகரி
அத்வைத ரூபிணி சங்கரியே
அருள்மழை பொழிந்திடும் அன்பர் மகிழ்ந்திடும்
அகிலம் செழிந்திட வந்தவளே
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

2. ஆதிகாரணி புராணி கலாம்ருத
ஆரணமே ஸுக வாரணமே
ஆரியர் தேடிய ஆரமுதே எங்கள்
ஆனைமுகத்தனைத் தந்தவளே
ஆசைகளகற்றிடும் அன்ன பூரணி
அழகுடை மங்கையே ஸ்ரீ லலிதே
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

3. இஷ்ட சித்தியருள் இன்பங்கள் நல்கிடும்
ஈச்வரியே பரமேச்வரியே
இன்னலகற்றிடும் இன்பங்கள் தந்திடும்
கந்தனை உதவிய காரிகையே.
ஸ்ருஷ்டி ஸ்திதியை காரணி ப்ரும்மணி
பரிமளரூபிணி பார்வதியே
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

4. ஈச்வரி மங்கள நாதர் மனம் மகிழ்
இன்ப மஹேச்வரி உமையவளே
ஸ்ரீ சதாசிவ ப்ரும்ம ஸ்வரூபிணி
சங்கரி நாயகி சாந்தினியே

ஸ்ரீ லலிதேச்வரி சங்கர வாஸினி
தேவ தேவி ஸ்ரீ காரணியே
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

5. உத்தர கோச மங்கையற்கரசி
உனதருள் வேண்டியே நாடி கின்றோம்
உம்பர் முனிவர் தொழ பங்கய மீதடீர்
உமையவளே எங்கள் இமையவளே
உலகினிற் கொளி தரு சுடரொளியே எம்
உள்ளத்தின் ஒளியாய் ஒளிர்ந்திடுவாய்
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

6. எப்பிறப்பிலும் உனை ஏத்திட அருள்வாய்
எளியவர்க்கருளும் ஏகாம்பிகையே
இப்பிறப்பிலுன் பதம் மறவா தருள் புரி
மலைமகளே எங்கள் தவமகளே
எமக்கருள் தாயும் தந்தையும் நீ என
ஏற்றுகின் றேன்உனைப் போ ற்றுகின்றேன்
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

7. ராஜ ரத்ன சதுர் வேதி மங்கலமாம்
புகலூர்ப் பதியுறை மாம றையோன்
மாதவ முகுந்தன் மதலை யென் வந்த
தவ உருவே எங்கள் சிவ உருவே.
பவ வினை நீக்கி நற்றவ வடிவைத்தகு
பாக்கிய மே எங்கள் சிலாக்கிய மே
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

8. திருமண மனைதனில் அந்தண வடிவினில்
இன்புற வந்த மகேச்வரனை
திருமண மாலைகல் சூட்டி மகிழ்ந்திடு
மறைமகளே எங்கள் குலமகளே
ஹர ஹர சங்கர சாம்ப சிவா வெனத்
துதிப்பவர்க் கருள் செய் தயா நிதியே
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

9. மாணிக்க வாசகர் மனமுருகித்திரு
வாசகம் பாடிய திருப்பதியில்

பழி திரி சுதந்தரர் போற்றும் கலாவலி
நாயகியே ஸகலா வலியே
இராமநாதபுர ஸேதுபதிக்கருள்
தாயகியே எங்கள் நாயகியே
ஜய ஜய ஹே ஜய மங்கள நாயகி
வந்தருளே வரம் தந்தருளே.

10. வாழிய மங்கள பக்த ஜனத்திரள்
வாழிய வாழிய வாழியவே
வாழிய திருமேனி தீண்டியோர் வாழியே
வாழிய அன்பர்கள் வாழியவே
வாழிய ஸேது மகீபதி வாழியே
வாழிய புகலூர் வாழியவே
வாழிய மாமறை வாழி ஸனா தனம்
வாழிய வாழிய வாழியவே.

- என். எஸ். ஸௌந்தரம் – போகலூர்

நாமா வளி

மங்க ளேச்வரி மங்கையற் கரசி
முகுந்த ராஜ மஹராஜ குமாரி
புகலூர் அந்தணர் அருந்தவப் புதல்வி
பக்த ஜனப்ரியே மாம்பா ஹி
திரிஸ்வத ந்திரர் தவப்புதல்வி
த்ரியம்பகி அம்பர் மாம் பாஹி
உத்தர கோசமங்கை உத்தமியே
உன்னடியார் களை உய்விப்பாய்.

தேவி அவதாரம்.

மங்களேச்வரி திருக்கல்யாண வரலாறு

(1)

இராகம் - தன்யாளி தாளம் - ஆதி

பல்லவி

உத்திரகோச மங்கைக்குமையவளமைய வந்து தித்தவதரித்தாளே.

அனுபல்லவி

மெத்தவு மெனத்தனருள், நித்தமுமே யொத்த சுக,
சித்த சுத்த உத்தம மிகுந்த முகுந்தன் காணவே
உத்திரகோச மங்கைக்குமையவளமைய வந்து தித்தவதரித்தாளே.

சரணம்

தமை நிகரரியயன், தருநிழலனுங் கூட
சமைய கோடிகளெலா, சார்ந்து நின்று கொண்டாட
விமலதிணையடி, விரைமல ரணிகுழல்
விமலை மாது தினமும் வித விதமாகவே
உத்திரகோச மங்கைக்குமையவளமைய வந்து தித்தவதரித்தாளே.

- (திரு. ஸோமநாத பாரதி)

(2)

இராகம் – அடாணா தாளம் – ஆதி

பல்லவி

அவதரித்தாளே மங்கை மங்களேச்வரி
புவிதனிலே – அவதரித்தாளே.

அனுபல்லவி

ஆதி பரா சக்தி அன்னை மங்களாம்பிகை
தேவி திருப்புகலூர் தாமரை மலர் தனில்
அவதரித்தாளே மங்கை மங்களேச்வரி
புவிதனிலே – அவதரித்தாளே.

சரணங்கள்

(1) தேவி திரு உத்தர கோச மங்கை தனிலே
ஊசி மேல் தவமிருந்து உத்தம முகுந்தனுக்கு
மகளாய் அவதரிக்க மாதவம் புரிந்துமே
இகபர சுகம் தன்னை அன்பர்க்கருள் புரிய
அவதரித்தாளே மங்கை மங்களேச்வரி
புவிதனிலே – அவதரித்தாளே.

(2) நாரணன் சோதரி காரண ரூபியே
வாரணன் தாயே எங்கள் தவக்கொழுந்தே
சுதந்தரி சௌந்தரி நிரந்தரியே அம்பா
சங்கரி கௌரி பராசக்தி பார்வதி
அவதரித்தாளே மங்கை மங்களேச்வரி
புவிதனிலே – அவதரித்தாளே.

(3)

இராகம் – கர்நாடக தேவ காந்தாரி தாளம் - ஆதி

பல்லவி

தாயே அருள் புரிவாய் – ஜெகன் மாதா
தயாபரி சங்கரி தாயே அருள் புரிவாய்

அனுபல்லவி

மாயா ஸ்வரூபிணி மங்கள நாயகி
மன்னன் ஸேது மகிபன் மனமகிழ் மறையே
தாயே அருள் புரிவாய் – ஜெகன் மாதா
தயாபரி சங்கரி தாயே அருள் புரிவாய்

சரணம்

அன்பர் மறையவரும் அருமை வேளாளரும்
இன்பமாய்க் கொண்டாட இலங்கிடும் தேவியே
உன் பாதம் நம்பினேன் உலக நாயகியம்பா
என்றும் உன் திருவருள் திளைத்திட சுகமருள்
தாயே அருள் புரிவாய் – ஜெகன் மாதா
தயாபரி சங்கரி தாயே அருள் புரிவாய்

- (ஸௌந்தரம்மாள் – போலூர்)

தாலாட்டு

தார்கண் முழக்கும் பரிமுழக்கும்
தவத்தின் முழக்குந் தமிழ் முழக்கஞ்
சகலா கமத்தி னிசைமுழக்குஞ்
சதுர்வேதத்தின் பொருள்முழக்குங்
கார் கொந்தளக மடந்தையர்கங்
கணத்தி னொடுகிண் கிணிமுழக்குங்
கரும்பா லையிற்பால் வருமுழக்குங்
கலியாணப்பே ரிகை முழக்கும்
வார்க்கும் பிகைகதுந் துமிமுழக்கு

மணிச்சேகண்டிப் பெருமுழக்கு
மாறா முழக்கு மெவளவென்றே
வயலிற்கிடந்த வலம்புரிச்சங்
கார்க்கு முழக்கப் பிரமபுரத்
தரசே தா லோ தா லே லோ
அழியா திருக்கு மியமலை
யமுதே தா லோ தா லே லோ.

வேறு

(1) பொய் வைத்திடுமுழ வஞ்சக நெஞ்சர்
புலைத்தொழில் கற்றோர்கள்
பூசனை செய்துப் தேச முறுந்துறை
புன்மைத் துறையென வே
மை வைத்திடுகுழல் வஞ்சக வஞ்சியர்
மா யையின் மூழ்குதுறை
வன்மத்துறையிது தன்மத்துறையவ
மலினத் துறையெனவே
தெய்வத் துறைபல சமயத் துறையிது
சின்னத் துறையெனவே
திருமகள் கணவனு மறியா தெழுவிய
மான பெருங்கடலிற்
சைவத் துறையில் விளைந்திடு முத்தே
தா லோ தா லே லோ
சந்தத மங்கையில் வந்த பசுங்கொடி
தா லோ தா லே லோ.

(2) பைங்கர முந்திய சந்திரனக்கினி
பன்னிரு செங்கதிர்கள்
பன்னகர் விஞ்சையர் சித்தரியக்கர்கள்
பண்ணவர் விண்ணவர்கள்
செங்கர முந்திய வெங்குலி சங்கொடு
திண்கிரி வென்றருளுந்
தேவர் பிரானழியாமுனி வோர்துதி
நான் முகனாதியுயிர்
ஐங்கர னுங்குக னுந்திரு மைந்தனு
மச்சுத னுங்கடலு
மண்ட மகண்ட மெழும்புவ னங்க
ளடங்கலு மேவளரச்
சங்கரர் பங்கி விருந்திடு பத்தினி
தா லோ தா லே லோ
சந்தத மங்கையில் வந்த பசுங்கொடி

தா லோ தா லே லோ.

(மங்களேசுவரி – பிள்ளைத்தமிழ்)

குறிப்பு: இப்பாடல்கள், தேவி கமல வாகனத்திலெழுந்தருளி அவதாரமாகி, தீபாராதனை கட்டியும், உபசாரங்களானவுடன் கானம் செய்யப் பெறும்.

தேவி கதலி நீராடியபின் அலங்காரம் செய்து திருஷ்டி கழித்தவுடன், பாடவேண்டியது.

இராகம் – காம்போதி

பல்லவி

மணக்கோல மாதர் செய்தார்
மங்களேச்வரி மங்கை மகிழ்ந்திட
மணக்கோல மாதர் செய்தார்
மங்களேச்வரி மங்கை மகிழ்ந்திட

அநுபல்லவி

கணக் கோரளவற்ற காமேசுவரிக்குற்ற
மணக்கோல மாதர் செய்தார்
மங்களேச்வரி மங்கை மகிழ்ந்திட

சரணம்

முகிலை வென்றல் தனை முனைந்து மிகக்கடிய
அகின்றும் புகை கமழ் அமைகுழலைப்படிய
அங்கயல் வண்டரவம் புணி காதரும்
மங்கை விழிகட்கு மை யெழுதித்துவங்கிட
அணிபணி வகைக ளனைத்து மிலங்கிட
கணி பெருக நவ மணிகள் துலங்கிட
மணக்கோல மாதர் செய்தார்
மங்களேச்வரி மங்கை மகிழ்ந்திட

தேவியும் தேவனும் தோள்மாலை மாற்றுதல்

பல்லவி

மாலையிட்டாள் மகிழ் மண மாலையிட்டாள்

அநுபல்லவி

மாலை வளைத்து மனதைக்கூட்ட
சால வடிவை சமைந்து காட்ட
மாலையிட்டாள் மகிழ் மண மாலையிட்டாள்

சரணம்

நண்ணுமழகை நயந்து நோக்க
கண்ணுக்கிசைந்து களிப்புண்டாக்க
மண்ணிலமரர் வியந்து சூழ்ந்திட
மண்ணிற் புகழ்வோர் மகிழ்ந்து வாழ்ந்திட
மங்களேசுவரி மங்கை யாவற்கும்
மங்களேந்தரும் மங்களேசற்கு
மாலையிட்டாள் மகிழ் மண மாலையிட்டாள்

-விவாஹ முகூர்த்தம்-

பல்லவி

முகுந்தன் மங்களக் கலியாணம் செய்தான்
மங்களேசுவரிக்கு மனமகிழ்ந்திதடத்திரு
முகுந்தன் மங்களக் கலியாணம் செய்தான்
மங்களேசுவரிக்கு மனமகிழ்ந்திதடத்திரு

அநுபல்லவி

தகுந்தகுமென வுந்த மாக்கள் கொண்டாட
மிகுந்த வடிவுடை விமலை மனைவுகூட
முகுந்தன் மங்களக் கலியாணம் செய்தான்
மங்களேசுவரிக்கு மனமகிழ்ந்திதடத்திரு

சரணம்

(1) முந்தக் கருணையரனை முகன்றனை யேத்தி
சிந்தையில் மங்களேசன் சீரடி போற்றி
அந்தமிலா நிதிக ளனைவதற்கும் வழங்கி
அந்தண ரனுமதியால் மறை முழங்கி
முகுந்தன் மங்களக் கலியாணம் செய்தான்
மங்களேசுவரிக்கு மனமகிழ்ந்திதடத்திரு

(2) கருதி மாமண மகன் களிக்கவன் பொடுமுய்ய
பருவு மனைவியொடு மதுவர்க பூஜை செய்ய
பருவ மோடன லோமம் பயன்றர வளர்ந்தோங்க
அருமறை முதந்தனீ அரல்வந்த வரந்தாங்க
முகுந்தன் மங்களக் கலியாணம் செய்தான்
மங்களேசுவரிக்கு மனமகிழ்ந்திதடத்திரு

(3) எங்கள் குலத்தரசி யெழிலுக்கலங்கரித்து
மங்களேசுவரி வாழ மங்கலியந் தரித்து
மங்கை யொரு பாசகத்தன் மகன் கரத்தைப் பிடிக்க
அங்கே லாசலோமம் செய்தாசையுடன் முடிக்க

முகுந்தன் மங்களக் கலியாணம் செய்தான்
மங்களேசுவரிக்கு மனமகிழ்ந்திதடத்திரு

(4) மற்றி ஸப்த பாதத்தை பகர்ந்த விதி மதிக்க
நித்தியஞ் செய்வேனென்றே நிகழ்த்தி அம்மி மிதிக்க
எத்திசையும் வாழ்ந்திட எல்லோரும் புகழ் கூற
துத்திய மிகுமணந் துலங்கிட நிறை வேற
முகுந்தன் மங்களக் கலியாணம் செய்தான்
மங்களேசுவரிக்கு மனமகிழ்ந்திதடத்திரு

-பூதக்கலம்-

(தரு ஸாவேரி)

பல்லவி

பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு
புகழ்ந்தார் புகழ்ந்தாரே
பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு

அநுபல்லவி

பூதலத்தில் முகுந்தன் பூஜை செய்த பேரெய்த
வேதம் புகழுங் கொன்றைவேணியன் அருள் செய்த
பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு
புகழ்ந்தார் புகழ்ந்தாரே

சரணம்

(1) இது விளையாட லென்றியம்ப மங்களேசனற்
புதுமையாக முகுந்தன் புதல்வியை மணந்தே தன்
பூதகணங்கள் தம்மை பூசுரர் போல் மிகுந்த
ஆதரவுடனுண்ண அருள் புரிந்தானந்த
பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு
புகழ்ந்தார் புகழ்ந்தாரே

(2) முன்ன முப்புச்சார் கீரை முது வெடி பழ முண்ண
இன்னங் கொடு வாருங்கள் இது வாச்சரியம் என்ன
உரிய முக்கனி ஜீனி உண்டை சர்க்கரை மண்ட
சரியான தென்று வாங்கிசதிராய் கணங்களுண்ட
பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு
புகழ்ந்தார் புகழ்ந்தாரே

(3) மெத்த வண்ணம் பருப்பு மேவு மறுசுவைகள்
எத்தனையோ சமைத்தெண்ணில் வாக்க வகைகள்
நல்ல விவை போலில்லை நாவுக்கென்று திருந்தும்
வல்ல பூதங்களன்பர் வானவர்களருந்தும்

பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு
புகழ்ந்தார் புகழ்ந்தாரே

(4) தங்கம் வெள்ளிக்கலங்கள் தரந்தரமாய்ப் பரப்ப
மங்கை யர்கள் பால் நெய்தேன் மகிழ்ந்ததில் நிரப்ப
எங்கெங்கும் பாயசங்க ளெடுத் தெடுத்தவர் விட்ட
சங்கென வெண்டயிரைச் சதிராயுருட்டியிட்ட
பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு
புகழ்ந்தார் புகழ்ந்தாரே

(5) அத்தனத ருளால் யாவுமளவற வளர்ந்த துண்ண
மெத்தவே சமைத்தவெல்லா மெல்லியர் படைக்க வாங்கி
உத்தம பூதரன்பர் உண்டனர் செழிக்க வன்பாய்
சித்தமது வந்து நோக்கி சிறந்த முகுந்தன் போற்ற
பூதக்கல மீதென்றே புகல யாவருமுண்டு
புகழ்ந்தார் புகழ்ந்தாரே

உ

திருக்கல்யாணம்

நிகழ்ச்சி நிரல்

தேவி திருக்கல்யாண

, ,
8 .
,
.

.

4 6-30
,
. 10
.
6 7-30
.
கமல
.
, ,
.
( ) 9
.
, ,

. 5-